Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
TILKO
❖ Banquet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E-Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
TP - 0212225969
Hotline: 0212229497
(C/2967)

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 18 சனிக்கிழமை (03.08.2013) பக்கங்கள் 20 ஓசை - 307


நாடக விழா
02


விருது
03


நல்ல அறிகுறி
08


நம்பமுடியாது
13


உறவுக்கு முதலிடம்
18

# அகற்றப்படுகின்றன படைமுகாம்கள் காணிகளின் மீள்கையளிப்பு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் படைத்தரப்பினரின் பாவனையில் இருந்த பொதுமக்களின் குடியிருப்புக் காணிகள் மற்றும் வீடுகள், கட்டடங்கள், பலவற்றை மீண்டும் மக்களின் பாவனைக்காக ஒப்படைக்கும் தொடர் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இக்காணிகளிலும் கட்டடங்களிலும் பல வருடங்களாக அமைக்கப்பட்டிருந்த படை முகாம்கள் இப்போது படிப்படியாக அகற்றப்பட்டு வருகின்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாதுகாப்பு அமைச்சருடனும், ஜனாதிபதியுடனும் மேற்கொண்ட நீண்ட பேச்சுவார்த்தையை அடுத்து இந்த நடவடிக்கை இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இதன் முதற்கட்டமாக 512 ஆவது பிரிகேட் கட்டளைப் பணியகம் அமைந்திருந்த அரியாலைப் பகுதியில் உள்ள பொதுமக்களின் காணிகள் மற்றும் கட்டடங்களும், 511 ஆவது பிரிகேட் கட்டளைப் பணியகம் அமைந்திருந்த அச்செழு மற்றும் உரும்பிராய், அச்சுவேலி ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்களின் வீடுகள் மற்றும் காணிகளும் அவற்றின் உரிமையாளர்களிடம் நேற்றையதினம் கையளிக்கப்பட்டிருக்கிறது.

மேலும் இதேபோன்று ஏனைய படைப்பிரிவுகள் மற்றும் பிரிகேட் கட்டளைப் பணியகங்கள் அமைந்திருக்கும் காணிகள், கட்டடங்கள் ஆகியனவும் பொது மக்களிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

## காணிகள் மீளளிப்பு தொடரும்




வடமாகாண சபைத் தேர்தலுக்கான பிரசார நோக்கத்துக்காக படையினர் வசமிருந்த வீடுகள் மற்றும் காணிகள் மக்களிடம் கையளிக்கப்படவில்லை என்பதும், ஏற்கனவே திட்டமிட்டபடி கையளிப்பு இடம் பெறுகின்றது. அதேவேளை, விரைவில் ஏனைய பகுதிகளும் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் ஈழமக்கள் ஜனநாயகக

19 ஆம் பக்கம் பார்க்க

## சுயேட்சைக் குழுக்களுக்கு சின்னங்கள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் சுயேட்சைக் குழுக்களுக்கான சின்னங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இம்முறை 9 சுயேட்சைக் குழுக்கள் யாழ். மாவட்டத்தில் தேர்தலில் களமிறங்கியுள்ளன. அவற்றின் சின்னங்கள் நேற்று முன்தினம் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரினால் வழங்கப்பட்டன. அச்சின்னங்களின் விபரம் வருமாறு,

அன்ரன் ரங்கதுசார தலைமையிலான சுயேடசைக் குழு - 01 - பந்து சின்னத்திலும், இராஜலிங்கம் மிதுன்ராஜ் தலைமையிலான சுயேட்சைக் குழு - 02 - இரட்டைக்கொடிச் சின்னத்திலும், நல்லைநாதன் திருலோகநாதன் தலைமையிலான சுயேட்சைக்குழு - 03 - தபால்பெட்டி சின்னத்திலும், பொன்மதிமுகராஜா விஜயகாந் தலைமையில் சுயேட்சைக்குழு - 04 - நாகபாம்பு சின்னத்திலும், ஜமீன் மொகமட் முஜையித் தலைமையிலான சுயேட்சைக்குழு - 05 - கூடாரம் சின்னத்திலும், மாணிக்கஜோதி அபிமன்னசிங்கம்

19 ஆம் பக்கம் பார்க்க

## அச்செழுவில் 42 வீடுகள் உட்பட படைவசமிருந்த காணிகள் கையளிப்பு

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியின் பயனாக வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் படைத்தரப்பினர் வசமிருந்த ஒருதொகுதி வீடுகளும், காணிகளும் பொது மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் பொதுமக்களின் வீடுகள் மற்றும் காணிகளுக்கான பத்திரங்கள் நேற்றைய தினம் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது, அச்சுவேலி, உரும்பிராய் மற்றும் அச்செழு ஆகிய பகுதிகளிலுள்ள 42 வீடுகளும், 23 காணிகளுக்குமான பத்திரங்களை யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வழங்கி வைக்க அவற்றை வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரதீபனிடம்

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைக்கான புனிதப்பயணம் பாப்பரசருக்கு ஜனாதிபதி அழைப்பு

இலங்கைக்கான புனித பயணத்தை மேற்கொள்ளுமாறு பாப்பரசர் பிரான்ஸிஸ்க்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்புவிடுத்துள்ளார் என்று ஜனாதிபதி செயலக பேச்சாளர்

19 ஆம் பக்கம் பார்க்க



## வன்முறையில் ஈடுபட்டால் வேட்பாளர்கள் மீது நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

தேர்தல் காலங்களில் வன்முறையில் ஈடுபடும் வேட்பாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் உறுப்புரிமையும் இரத்துச் செய்யமுடியும் என யாழ். தேர்தல் மாவட்ட உதவித் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் அச்சுதன்

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் களமிறங்கிய கட்சிகள் சூடுபிடிக்கும் பிரசாரப் போர்

எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடக்கவுள்ள வடக்கு மாகாணசபைத் தேர்தலில் 36 ஆசனங்களுக்காக மொத்தம் 14 அரசியல்கட்சிகளும், 28 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுவதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நண்பகலுடன் வேட்பாளர் பட்டியல்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதை அடுத்து இது தொடர்பான விபரங்களை தேர்தல் ஆணையாளர் வெளியிட்டுள்ளார். இக் கட்சிகள் தமது பிரசார நடவடிக்கைகளில் இப்போது தீவிரமாக இறங்கியுள்ளன. இந்தத் தேர்தலில் மாவட்ட ரீதியாக போட்டியிடும் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் விபரம் வெளியாகியுள்ளது.

யாழ்ப்பாணம்

1.சிறிலங்கா தொழிலாளர் கட்சி, 2. இலங்கை தமிழரசுக் கட்சி, 3.ஜனசெத பெரமுன, 4.சோசலிச சமத்துவக் கட்சி, 5. ஐக்கிய தேசியக் கட்சி, 6. மக்கள் விடுதலை முன்னணி, 7. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, 8. ஜனநாயகக் கட்சி, 9. ஜனநாயக ஐக்கிய முன்னணி, 10. ஐக்கிய சோசலிசக் கட்சி, 11.சிறிலங்கா மக்கள் கட்சி,

வவுனியா மாவட்டம்

1.ஐக்கிய மக்கள் சுதந்திர

19 ஆம் பக்கம் பார்க்க

# தமிழ் அவைக்காற்றுகைக் கழகத்தின் மாபெரும் நாடக விழா யாழில் இன்று



(யாழ்ப்பாணம்)

எண்பதுகளில் யாழ்ப்பாணத்தில் உருவாகி பின்னர் மேற்குலகில் தமிழர்கள் மத்தியில் பெரும் வரவேற்புடன் இலண்டன் மாநகரில் இயங்கிவந்த அவைக்காற்றுகைக் கழகமானது தமது 35 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று மாலை 3 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நாடகவிழா ஒன்றினை நடத்தவுள்ளது.

இலங்கை அவைக்காற்றுக் கழகம் என்னும் பெயருடன் 1978 ஆம் ஆண்டு இந்நிறுவனம் யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டது. தமிழில் நல்ல நாடகப்பிரதிகள் இல்லை என்ற குறைபாட்டினை நிவர்த்தி செய்யும் நோக்கோடும், மேற்கத்தைய அரங்க நுட்பங்களை தமிழில் கொண்டுவந்து அறிமுகம் செய்யும் நோக்கோடும் அதிகமான மொழிபெயர்ப்பு நாடகங்களை இவர்கள் மேடையேற்றினர்.

70 பதுகளில் சிறந்த நெறியாளராக தன்னை வெளிப்படுத்திய க.பாலேந்திரா, கலைக்கழக நாடகங்களை நெறிப்படுத்தினார்.

அமெரிக்காவில் பல வருடங்கள் வாழ்ந்தவரான நிர்மலா நித்தியானந்தன், பல பிரபல விமர்சகரும், ஆக்க கர்த்தாவுமான ஏ.ஜெ.கனகரத்தினா, மு.நித்தியானந்தன் ஆங்கில மொழியிலும், இலக்கியங்களினதும் புலமை பெற்றிருந்த குழுவினர் அக்காலத்தில் இணைந்து செயற்பட்டனர்.

அது மட்டுமன்றி 'ரசிகர் அவை' என்னும் ஒரு அமைப்பினை உருவாக்கி, அந்த ரசிகர் அவைக்காக நாடகங்களைத் தயாரித்தனர். அதனால் குறிப்பிட்ட ஒரு பார்ப்போர் சமூகம் அவர்களின் நாடகங்களுக்கென தொடர்ச்சியாக இருந்தன.

1982 ஆம் ஆண்டின் பின் புலம்பெயர்ந்து லண்டனுக்குச் சென்ற பாலேந்திரா, ஆனந்தராணி தம்பதியினர் அங்கு தமிழ் அவைக்காற்றுகைக் கலைக் கழகம் என்ற பெயரில் சிறிய மாற்றத்தினைச் செய்தும் புலம்பெயர்ந்த மக்கள் மத்தியில் தொடர்ந்து இயங்கி வந்தனர்.

மொழிபெயர்ப்பு நாடகங்களை மட்டுமன்றி, நாடகப்பட்டறைகளையும், நாடக விழாக்களையும் நடத்தினர். அத்துடன் அரங்கங்களை உருவாக்கி சிறுவவர் நாடக விழாக்களையும் நடத்தி வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக நெறியாளர் க.பாலேந்திரா தலைமையில் மீளவும் யாழ்ப்பாணம் வருகைதந்து தமது கலைப் பணியை தொடர்கின்றனர். (52)

# இரு சடலங்கள் மட்டும் அடையாளம் காணப்பட்டன

(யாழ்ப்பாணம்)

தீவகப்பகுதிகளில் கரையொதுங்கிய 5 சடலங்களில் இரண்டு அடையாளம் காணப்பட்டுள்ளன.

கடந்த 25 ஆம் திகதி இரவு மன்னார் கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்காகச் சென்ற இரண்டு மீனவர்கள் காணாமற்போயிருந்தனர். இவ்விரு மீனவர்களுமே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார், பேசாலை 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜோசப் டியூரன் அப்புகாமி (வயது - 25), பேசாலையைச் சேர்ந்த கமால்தீன் சமீன் (வயது - 25) என்ற மீனவர்களின் சடலங்களே நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

நேற்று மாலை பிரேத பரிசோதனையின் பின்னர் இரு சடலங்களும் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

பெண் ஒருவரினதும், இரு ஆண்களின் சடலங்களும் இன்னும் அடையாளம் காணப்படாத நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் உள்ளன.

இச்சடலங்கள் சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா சென்றவர்களுடையதாக இருக்கலாம் என்ற சந்தேகம் இருப்பதாக நேற்று இடம்பெற்ற பொலிஸாரின் வாராந்த ஊடகவியளாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது. (இ,பா)

# 86 கிலோகிறாம் கஞ்சாவுடன் 6 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

வவுனியா பொலிஸ் பிரிவில் விசேட அதிரடிப்படையினரினால் சுமார் 86 கிலோக்கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஆறுபேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாக யாழ்.சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டே அவர் இதனைத் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும், இவர்கள் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டு எதிர்வரும் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# மாட்டுவண்டி சவாரிப்போட்டி

(பூநகரி)

பூநகரி - நல்லூர் மடத்துப் பிட்டி சவாரித்திடலில் நாளை மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி நடைபெறவுள்ளது.

மாலை 1.00 மணியளவில் ஆரம்பமாகவிருக்கும் இப்போட்டியில் வடபகுதியின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் கொண்டுவரப்படும் காளைகள் பங்குபற்றவுள்ளன. இப்போட்டிக்கு பெருமளவான போட்டியாளர்கள் பங்குபற்றவுள்ளனர். (112)

# திருப்திகர பேருந்து சேவை

நாவற்குழி, தச்சன்தோப்பு, கோயிலாக்கண்டி, தனங்கிளப்பு ஊடாக நல்ல நிலையிலுள்ள பேருந்து, சேவையில் ஈடுபடுத்தப்படுவதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலையின் முகாமையாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி பிரதேச மக்களது கோரிக்கைக்கு அமைவாக அமைச்சர் டக்களஸ் தேவானந்தாவினால் பணிப்புரை வழங்கப்பட்டதற்கு அமைவாக இந்தப் பேருந்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

நல்ல நிலையிலுள்ள 63 - 0431 என்ற பேருந்து தற்போது சேவையில் ஈடுபடுத்தப்படுவதாக யாழ்.சாலை முகாமையாளர் மேலும் அறிவித்துள்ளார்.



கிளிநொச்சி ஏ9 வீதியில் கரடிப்போக்குச் சந்திக்கு அருகில் நேற்று மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற விபத்தில் இருவாகனங்கள் சேதமடைந்துள்ளதுடன் 2 பேர் காயமடைந்துள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்து அக்கரைப்பற்று நோக்கிச் சென்றுகொண்டிருந்த பேருந்து பலசரக்கு பொருட்களை இறக்கிக்கொண்டிருந்த லொறியுடன் மோதியுள்ளது. (ர)


ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 978 | திகதி 01.08.2013

வெற்றி எண்கள்: 19 24 29 30 | ஆங்கில எழுத்து: Y

ஜக்பொட் பரிசு ரூ. 1,29,42,300/= வெற்றி பெற்றுள்ளார்

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,29,42,300/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8 | 50,000/= | ரூ. 4,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 269 | 1,000/= | ரூ. 2,69,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 483 | 1,000/= | ரூ. 4,83,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12008 | 60/= | ரூ. 7,20,480/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6259 | 40/= | ரூ. 2,50,360/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 157470 | 20/= | ரூ. 31,49,400/= |
| ஆங்கில எழுத்து | 22883 | 20/= | ரூ. 4,57,660/= |
| | | மொத்தம் ரூ. | 67,29,900/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 விதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மாத்தறை | 704612428-5-25 |
| யாழ்ப்பாணம் | 704605041-1-31 |
| கொழும்பு | 704600564-8-18 |
| கண்டி | 704601950-5-45 |
| களுத்துறை | 704611753-8-28 |
| புத்தளம் | 704600779-5-35 |
| வவுனியா | 704613899-1-21 |
| குருநாகல் | 704602609-5-45 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 71,29,900/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 13,250,520/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.08.05 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 333546/7

(C/2970)







# நீர் இறைக்கும் இயந்திரம் திருட்டு

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் கடந்த புதன்கிழமை 15 ஆயிரம் ரூபா பெறுமதியான தண்ணீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று வீடு ஒன்றில் திருடப்பட்டிருப்பதாக மானிப்பாய் பொலிஸ் பிரிவில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.


இந்தக் களவு சம்பவத்தில் சந்தேக நபர் எவரும் கைது செய்யப்படவில்லை புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (பா)


சென்ஜூரின் அற்புத வழிபாடு

இன்றும் என்றும் உலகம் முழுவதும் யேசுபிரானின் புனித இருதயம் போற்றப்பட்டும், ஏற்றப்பட்டும், நேசிக்கப்பட்டும், பாதுகாக்கப்பட்டும் யேசுபிரானின் புனித இதயம் இரக்கம் கொள்ளட்டும். திக்கற்றவர்களுக்கு உதவுவரான புனித யூட் ஆனவரே எமக்காக வேண்டிக்கொள்ளும். 9 நாட்களுக்கு இந்தப் பிரார்த்தனையை கூறுங்கள். உங்களது பிராத்தனை 8 நாட்களுக்கு 9 நாட்கள் எடுக்கும். இந்த பிரார்த்தனையை பிரசுரிப்பதற்காக வாக்கு தத்தம் எடுத்துக் கொள்ளவும். வேண்டுதல் நிறைவேற்றப்பட்டுள்ளது. நன்றி அறிந்த ஸ்தோத்திரம் எங்கள் குடும்பங்களுக்கு செய்த எல்லா நன்மைகளுக்கும் நன்றி

(C/2971) S.கோகிலா

# சட்டவிரோத சுண்ணக்கல் அகழ்வு தெல்லிப்பளையில் 13 பேர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ். தெல்லிப்பளை பகுதியில் சட்டவிரோதமாக சுண்ணக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்தாகக் கூறப்படும் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்

இதன்பொருட்டு பயன்படுத்தப்பட்ட நான்கு பைக்கோ இயந்திரங்கள், ஐந்து உழவு இயந்திரங்கள் மற்றும் இரண்டு லொறிகளையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் குறிப்பிட்டுள்ளனர்.


அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் போர்வையில் சந்தேகநபர்கள் இந்த சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபட்டிருந்ததாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கூறியுள்ளனர்.

சந்தேகநபர்கள் தங். கொட்டுவ மற்றும் தெல்லிப்பளை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரியுவந்துள்ளது.

இந்த சம்பவம் குறித்து பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தனிநாயகம் அடிகளாரின் நினைவாக ஆராய்ச்சி நிலையம் உருவாக வேண்டும்

## கலாநிதி ஆறுதிருமுருகன்



(திருநெல்வேலி)

தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் கனவை நனவாக்கத் பிள்ளைகளுக்குத் தமிழில் பெயர் சூட்டுவதற்கு நம்மவர்கள் முன்வர வேண்டும்.

ஈழத் தமிழர்கள் அடிகளாரின நூற்றாண்டு விழாவில் இதனை ஓர் பிரகடனமாக அறிவிக்க வேண்டும் என செஞ்சொற்செல்வர கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத் திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவில் தொடக்கவுரை ஆற்றும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பேராசிரியர் தி.வேல்நம்பியின் தலைமையில் வைபவம இடம் பெற்றது.

தொடர்ந்து உரைநிகழ்த்திய செஞ்சொற்செல்வர் அன்னாரின் நூற்றாண்டு விழாப் போல பல நிகழ்வுகளை நாம் நடத்தினாலும் அவரது கனவை நனவாக்குவதற்கு நாம் முன்னின்று முயற்சிக்க வேண்டும்.

தனது பெயரைத் தூய தமிழில் மாற்றியமைத்து தமிழுக்கு அளப்பரிய சேவைகளை செய்தவர் இப்பெரியார்.

தூய துறவு வாழ்வை அவர் மேற்கொண்டார். உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெறுவதற்கு வித்திட்டார். வள்ளுவர் கூடம், பூம்புகார், சிலப்பதிகார கூடம், சிறப்புத் தமிழின் ஓர் நுழைவாயில்கள் தமிழ்நாட்டில் எழுப்பப்படுவதற்குக் காரணகர்த்தாவாக விளங்கியவர். உண்ணாமல், உறங்காமல் இரவு, பகலாகத் தமிழராய்ச்சி செய்த உத்தமர்.

அடிகளாரின் நினைவாக தொல்லியற் பொருட்களைப் பாதுகாத்து ஆய்வு செய்யும் ஆராய்ச்சி நிலையம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றார். (137)

# இந்திய மீனவர்களை தூதரக அதிகாரிகள் பார்வை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள் சென்று பார்வையிடடுள்ளதுடன் அம்மீனவர்களுக்கான அத்தியாவசிய உதவிகளையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீனவர்களை நேற்று முன்தினம் பிற்பகல் நீதிமன்றத்தில் முற்படுத்திய போது அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (பா)

# நகை திருடியவர்கள் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பால் பண்ணைக்கு அருகில் நகை ஒன்றைத் திருடினார் என்ற சந்தேகத்தின் பேரில் நான்கு பேர். கோப்பாய பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருப்பதாக யாழ் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியைத் திருடிய இவர்கள் யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இவர்கள் மானிப்பாய் கொக்குவில், ஏழாலை, மன்னார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர் தெரிவித்தார். (பா)

## அலங்கார உற்சவம்

மீசாலை கிழக்கு அருள்மிகு பன்றிக்கேணி கந்தசுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் ஆடி அமாவாசை தினமான எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மால்ல 5.30 மணிக்கு ஆரம்பமாகி 15 தினங்கள் திருவிழா இடம்பெறவுள்ளன.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், 20 ஆம் திகதி பகல் 10.30 மணிக்கு தீர்த்த விழாவும், 21 ஆம் திகதி மாலை 5 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

உற்சவத்தில் தேசமான்ய பண்டிதர் கலாநிதி வ.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் கிரியைகளை ஆற்றவுள்ளார். (இ)

# பேராசிரியர் சண்முகலிங்கனுக்கு கனேடிய அரசின் சர்வதேச விருது

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் சவாலான காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக கடமையாற்றிய பேராசிரியர் என். சண்முகலிங்கனுக்கு கனேடிய ஒன்ராடியோ மாநில அரசு சார்பாக சர்வதேச விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருதை கையளிக்கும் நிகழ்வு அண்மையில் பேராசிரியர் சண்முகலிங்கன் கல்வி கற்ற யாழ்ப்பாணம் தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரியில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் வேல் சிவானந்தன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் வாசிக்கப்பட்ட விருது உரையிலேயே மேற் கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழக சமூகத்திற்கும் உலகத்தமிழ் சமூகத்திற்கும் ஆற்றிய புலமைப் பணிக்கும் சமூகப்பங்களிப்புக்கும் இந்த விருது வழங்கப்படுவதாகவும் பேராசிரியர் என். சண்முகலிங்கன் பதவி ஏற்ற காலம் சவாலான காலமாக இருந்ததுடன் அக் காலத்தில் அவர் தன்முனைப்பாக சமூக உணர்வுடன் செயற்பட்டார் என்றும் அந்த உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



இடம்பெயர்ந்து முகாம்களில் உள்ள மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு மீண்டும் கொண்டு வரும் செயற்பாட்டை முன்னெடுத்து மாணவரினதும் சமூகத்தினதும் மீளும் நம்பிக்கையை உருவாக்கியவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியல் பேராசிரியரான என். சண்முகலிங்கன் 2007ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் துணைவேந்தராக பதவி வகித்தார்.

இலங்கையில் தமிழில் சமூகவியல் துறையை ஏற்படுத்தியதில் மிக முக்கியமான பேராசிரியராகக் கருதப்படும் சண்முகலிங்கன் சமூகவியல் மற்றும் பண்பாடு சார்ந்த பல ஆய்வுக் கட்டுரைகளையும் புத்தகங்களையும் எழுதியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு விபரங்கள் வழங்கப்படுவதில்லை

(அச்சுவேலி)

வளலாய் பகுதியில் சமுர்த்திப் பயனாளிகளுக்கு மாதாந்தம் வழங்கப்படும் சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவுகள் பற்றிய விபரங்கள் தமக்கு உரிய முறையில் தெரியப்படுத்தப்படுவதில்லை என சமுர்த்திப் பயனாளிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஒவ்வொரு 'பிரிவுகளுக்குமான கொடுப்பனவுகளையும் தனித்தனியாக வழங்கும் வேளைகளில் எந்தப் பிரிவிற்கு முதல் வழங்குவது என அறிவிக்கப்படுவதில்லை எனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.



எனவே சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்குவது பற்றிய விபரங்களை விளம்பரப் பலகை மூலம் அல்லது பத்திரிகையில் தெரியப்படுத்துமாறு இவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (85)



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 197 ஆவது ஆண்டு நிறைவு தின நிகழ்வும் கல்லூரி தின நிகழ்வும் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன், சென்.பீற்றர் தேவாலய குரு முதல்வர் ஆகியோர் உரையாற்றுவதையும் கலந்துகொண்ட பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோரையும் காணலாம்.

முதல் குற்றத்தை சரி என்று சாதிப்பவன் இரண்டாவது குற்றத்தையும் செய்தவனாகிறான். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## மாகாண சபைக்கு எதற்காக?

வடமாகாண சபையில் போட்டியிடுவதற்கான காரணத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொல்லிவருகிறார்கள். அவர்கள் யாருக்குமே கூட அதில் தெளிவில்லை என்பதைத்தான் நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது.

ஆனால் அவ்வப்போது வாய்க்கு வந்தபடி அவர்கள் சொல்வதையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தால், மாகாண சபையை வேறு யாரும் எடுத்துக்கொண்டு விடாமல் தடுப்பதற்காகவும், அப்படி வேறு யாரும் எடுத்துக்கொண்டு விட்டால் அபிவிருத்திகளைச் செய்தும் மெல்ல மெல்ல அதிகாரங்களைக் கூட்டிக் கொண்டும் தமிழ்மக்களின் குறைந்தபட்ச அபிலாசைகளையேனும் திருப்திப்படுத்தும் நிலைக்குச் சென்று விடுவார்கள்; அப்படி அதை விட்டால் தங்கள் அரசியலுக்கு ஆபத்து என்பதற்காகப் போட்டியிடுவதாகவே விளங்கிக்கொள்ள முடிகிறது.

மாகாண சபையை முற்றுமுழுதாக எதிர்ப்பதாகச் சொல்லியவர்கள், கிழக்கிலும் இப்போது வடக்கிலும் தாங்கள் போட்டியிடுவதற்கு சொல்லும் காரணம், அரசாங்கம் வென்றுவிடகூடாது; அரசை ஒற்றுமையாக எதிர்க்கிறோம் என்பதை சர்வதேசத்திற்குக் காட்டவேண்டும் என்பதும்தான்.

அதாவது, மாகாணசபை முறைமையையோ, அதன் மூலம் மக்களுக்கு ஏதாவது செய்யலாம் என்பதையோ, மாகாணசபையில் இருந்துகொண்டு அதிகாரங்களைப் படிப்படியாகக் கூட்டி நிரந்தரத் தீர்வுக்குச் செல்லலாம் என்பதையோ அவர்கள் இப்போதும் நம்பவில்லை.

பிறகெதற்கு இவர்களை மாகாணசபைக்கு அனுப்ப வேண்டும்? அங்கும் கிடைக்கக்கூடிய சில வாகனங்கள், சொந்தபந்தங்களுக்கு உத்தியோகங்கள் மற்றும் தமக்கான சலுகைகளை எடுத்துக்கொண்டு தொடர்ந்தும் அரசு எதையும் செய்யவில்லை என்ற அதே கேட்டுப்புளித்த பழைய பாடலைப் பாடிக்கொண்டு திரிவதற்கா?

சர்வதேசத்திற்கு ஒற்றுமைப் படங்காட்டுதல் என்று மற்றுமொரு தேய்ந்து முனைமழுங்கிப்போன அஸ்திரம் வைத்திருக்கிறார்கள். இதுவரைகாலமும் காட்டிய "ஷோ"களுக்கு சர்வதேசம் பன்னிப் பன்னிச் சொல்லிய பதில்கள் இவர்களுக்கு இன்னும் விளங்கவில்லையாம். மக்கள் காட்டிய ஒற்றுமை பத்தவில்லை அதுதான் அவர்கள் இன்னும் வந்திறங்கவில்லை என்று இவர்கள் விடாமல் கதைசொல்வதை நாங்களும் எவ்வளவு காலந்தான் வலிக்காத மாதிரியே நடித்துக் கேட்டுக்கொண்டிருப்பது?

தமிழ் மக்களுக்குப் பிரச்சினை முடிந்துவிடக் கூடாது என்பதற்காகவே இவர்கள் வடக்கு மாகாண சபையையும் பிடித்துவிடுவதற்குப் பரபரக்கிறார்கள். மற்றும்படி, மாகாண சபையைப் பயன்படுத்துவது பற்றியோ 13–ஐக் காப்பாற்றுவது பற்றியோ தமிழ்மக்களுக்கான அரசியலுரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்குச் சாத்தியமான வழிகளைப் பற்றிக்கொள்வது பற்றியோ கிஞ்சித்தும் அக்கறையில்லை.

மக்களை எப்படி ஏமாற்றுகிறார்கள் இவர்கள் என்று விளங்கிக்கொள்ள ஒரு சின்ன உதாரணத்தைப் பார்க்கலாம். 13–வது திருத்தத்தை அரசியல் தீர்வின் ஆரம்பப் புள்ளியாகக் கூட ஏற்றுக்கொள்ள முடியாது என்று பல காலமாகவே அடித்துக் கூறி வருகிறார்கள். அண்மையில் கூட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திட்டவட்டமாக அதுவே தங்கள் நிலைப்பாடு என்றார். நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒரு கண்துடைப்பு; அதில் போய் எந்தத் தீர்வையும் பெறமுடியாது என்றும் அலட்சியமாகச் சொல்லிவருகிறார்கள்.

ஆனால், மாகாண சபையை வென்று என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்டால், த.தே.கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் சொல்கிறார், அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கும், 13–ஐ காப்பாற்றவும் அரசுடன் பேசுவோம் என்பதாக. அப்படி என்றால் தெரிவுக்குழுவுக்கு போகத் தீர்மானித்துவிட்டார்களா? அதாவது, 13–வது திருத்தத்தை, தெரிவுக்குழுவை, அரசுடன் பேசி அபிவிருத்தி செய்வதை எல்லாம் இப்போது ஏற்றுக்கொண்டு விட்டார்களா என்பதை மக்கள் தேர்தலுக்கு முன் அவர்களிடம் தெளிவாய்க் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். - ஆசிரியர்

# வடக்கு மாகாணத் தேர்தல்; ஜனநாயகத்தைப் பாதுகாக்கும்

## அமைச்சர் சிறிசேன நம்பிக்கை

வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதன் மூலம் வடக்கு மக்களின் ஜனநாயக உரிமை பாதுகாக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இம்முறை மாகாண சபைத் தேர்தலில் இதுவே விசேட அம்சமெனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்குகளை பயன்படுத்தி தமக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான அதிகாரம் தற்போது வடக்கு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. துப்பாக்கி முனையில் அடிமையாக்கப் பட்டிருந்த மக்கள் இன்று புள்ளடியிட்டு பிரதிநிதிகளை தெரிவு செய்யும் சூழலை அரசாங்கம் உருவாக்கியுள்ளது.

வடக்கில் மாகாண சபைக்கான தேர்தலை நடாத்துவதும் மாகாண் சபையை உருவாக்குவதும் கடந்த காலங்களில் சவாலாக காணப்பட்டது. பயங்கர வாதத்தை ஒழித்ததன் மூலம் குறித்த சவால் முறியடிக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில் எவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப் பட்ட போதிலும் வடமாகாண சபையை ஏற்படுத்துவதற்கான தேர்தல் நடாத்தப்படுவது முழு நாடும் பெற்ற வெற்றியாகுமென அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வடக்கு மக்களுக்கு வாக்களிப்பதற்கான உரிமையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கமே வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துளளார்.

# யாழ். நவநாகரிக திருடன் முள்ளியவளையில் மாட்டினான்

(முள்ளியவளை)

முள்ளியவளை நான்காம் வட்டாரத்தில் பெண் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் நேற்று முற்பகல் நவநாகரிக, உடையணிந்து சென்று பொருட்கள், பணம் மற்றும் நகைகளை திருடியவர், முள்ளியவளை பொலிஸாரின் துரிதமான செயற்பாட்டின் மூலம் உடனடியாகவே கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த பெண் சமுர்த்தி அலுவலர் தனது கடமைக்கு சென்றுள்ளார். அவரது கணவரான சிறிகரன் நேற்றைய தினம் மாணவர்களுக்கான தேர்ச்சி அறிக்கையைப்பெற பாடசாலைக்குச் சென்றுள்ளார். இதனை அவதானித்த திருடன் முற்பகல் பத்து மணியளவில் அவர்களின் வீட்டுக் கதவினை உடைத்து மடிக்கணனி, கமராக்கள் என சுமார் மூன்று பவுண் நகை என்பவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளார். சுமார் 10.20 மணிக்கு பாடசாலையிலிருந்து வருகைதந்த சிறிகரன் வீட்டுக்கத்வை உடைத்து பொருட்கள் கொள்ளையிடப்பட்டதனை அவதானித்துள்ளார்.

உடனடியாக முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்தார். துரிதமாக செயற்பட்ட முள்ளியவளை பொலிஸ் பொறுப்பதிகாரி, அந்தக்கிராமத்தையே சுற்றி வளைத்தார்.

இதன்போது திருடப்பட்ட பொருட்கள் மற்றும் பணத்துடன் குறித்த திருடன் பற்றைக்குள் ஒளிந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டார். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பைச் சேர்ந்தவரெனவும் மேசன் வேலைக்காக அங்கு சென்று தங்கியுள்ளாரெனவும், திருடப்போகும் வேளை அரச அலுவலர் போன்று, நவநாகரிக உடை அணிந்து சென்றுள்ளதாகவும் தெரியவருகின்றது.

முள்ளியவளை பொலிஸ் பொறுப்பதிகாரியின் துரிதமான செயற்பாட்டின்மூலம் திருடன் பிடிக்கப்பட்டதற்கு அப்பகுதி மக்கள் மிகவும் மகிழ்வடைந்துள்ளனர். (125)

# வெளிநாட்டு படையதிகாரிகளுக்கு பயிற்சிகள் வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கையில் வெளிநாட்டு படையதிகாரிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

இலங்கையின் பாதுகாப்பு கட்டளை மற்றும் இராணுவ கலலூரிகளில் வெளிநாட்டு அதிகாரிகளுக்கு பயிற்சிகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

முப்படையினர், பொலிஸ் துறைகளில் மத்திய மட்டத்தில் உள்ள அதிகாரிகளுக்கு பயிற்சிகளை வழங்குவதற்காக 2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கல்லூரிகளின் ஊடாக வெளிநாடுகளிலுள்ள அதேதரத்தில் உள்ள அதிகாரிகளுக்கு பயிற்சிகளை வழங்க சந்தர்ப்பம் அளிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதனடிப்படையில், இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவு ஆகிய நாடுகளின் அதிகாரிகளுக்கு இலவசமாக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

# யாழ். பல்கலை கலைப்பிரிவு மாணவர்கள் விடுதிகளிலிருந்து வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற 3 ஆம், 4 ஆம் வருட கலைப்பீட மாணவர்களுக்கிடையிலான குழுமோதலை அடுத்து இரு பீடங்களையும் சேர்ந்த மாண வர்கள் மறு அறிவித்தல் வரை பல்கலைக் கழகத்திற்கு நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், விடுதிகளிலிருந்தும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

குறித்த இரண்டு பீட மாணவர்களும் நேற்று முன்தினம் பல்கலைக்கழக வளாகத்தில் மிகவும் அநாகரிகமான முறையில் குழு மோதலில் ஈடுபட்டனர். இதனையடுத்தே அவர்கள், விடுதிகளிலிருந்து வெளியேற்றப் பட்டதுடன், பல்கலை க்கழகத்திற்குள்ளும் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டது. எனினும் இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்களும், பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் முதலாம், இரண்டாமாண்டு மாணவர்களும் ஏனையபீட மாணவர்களும் வகுப்புக்களுக்கு செல்ல முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் சட்டம் தொடர்பாக வேட்பாளர்களுக்கு செயலமர்வு

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு தேர்தல் சட்டம் குறித்து தெளிவுபடுத்தவென கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேர்தல் வேட்பு மனுத்தாக்கல செய்யப்பட்டது தொடக்கம் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதனால் எதிர்வரும் 6,7 ஆம் திகதிகளில் வடமேல் மற்றும் மத்திய மாகாண வேட்பாளர்களுக்கும் 12,13 ஆம் திகதிகளில் வட மாகாண வேட்பாளர்களுக்கும் செயலமர்வு இடம்பெறவுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த செயலமர்வில் தேர்தல் திணைகளத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர். இதே வேளை, எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு எதிர்வரும் 6 ஆம் திகதி தொடக்கம் விருப்பு வாக்கு இலக்கம் வழங்கப்படும் என தேர்தல் திணைக்களம் கூறியுள்ளது. அதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

■ என்.சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து

சமீபத்தைய ஊடக பிரசங்கங்கள் மட்டுப்படுத்தப்பட்டதாகவோ அல்லது வேறுவிதமாகவோ உள்ளது, எல்.ரீ.ரீ.ஈ இன்னும் இங்கு இருக்குமாயின் வடக்கு மற்றும் கிழக்கு தேர்தல்களை நடத்தியிருக்க முடியாது, அரசாங்கம் சொல்வதைப்போல உயிரோடுள்ள பயங்கரவாத அமைப்பின் நினைவுகளை வைத்திருப்பதை தவிர வேறு எதையும் அடைந்திருக்க முடியாது.

அதேபோல துரதிஸ்டமானது தமிழ் தேசியவாதிகள் மற்றும் ரி.என்.ஏ ஆகியோர் 2001இல் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல்களில் எல்.ரீ.ரீ.ஈ நடத்திய மோசடிகளினால் தங்களுக்கு எந்தப் பங்கு அல்லது ஆதாயம் இல்லை என்று சொல்வதைப்போல, வரப்போகும் வட மாகாண சபை தேர்தல்களில் முறைகேடுகள் நடைபெறுவதற்கு சாத்தியம் உள்ளதாக பேசிவருவது.


எல்.ரீ.ரீ.ஈ கால தேர்தல்களில் மோசடிகளினால் பதவிகளை அடைந்தவர்கள், அதற்காக எழுந்து நின்று முழு நாட்டு மக்களிடமும் மன்னிப்பு கோருவதற்கு துணிவு இல்லாததுடன், மற்றும் 2005 ஜனாதிபதி தேர்தலை

**துரதிஸ்டமானது என்னவென்றால், தமிழ் தேசியவாதிகள் மற்றும் ரி.என்.ஏ ஆகியோர் 2001இல் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல்களில் எல்.ரீ.ரீ.ஈ நடத்திய மோசடிகளினால் தங்களுக்கு எந்தப் பங்கு அல்லது ஆதாயம் இல்லை என்று சொல்வதைப்போல, வரப்போகும் வட மாகாண சபை தேர்தல்களில் முறைகேடுகள் நடைபெறுவதற்கு சாத்தியம் உள்ளதாக பேசிவருவது.**

அல்லது தீவிரவாத எண்ணங்கள் பற்றிய பொதுமக்களின் பிரதிபலிப்பை அறிவதற்காக திரும்பவும் இப்போது சோதனை செய்யப்படுகிறது. இன விசுவாசத்தின்மீது தீர்ப்பெழுதும் தமிழ் சமூகத்தின் தனி நபர்கள் எல்.ரீ.ரீ.ஈக்கு பிந்திய காலத்தில் மர்மமாக மறைந்துள்ளனர், அதன் தோற்றம் எங்கேயுள்ளது என்று யாருக்காவது தெரிந்திருக்க நியாயமில்லை. இதில் உள்ள மற்றொரு கேள்வி எல்.ரீ.ரீ.ஈ யின் அதிகாரமும் புகழும் ஓங்கியிருந்த காலத்தில் அது தமிழர்களுக்கு "துரோகி - தியாகி" முத்திரை குத்துவது உட்பட, எல்லா சிந்தனைகளையும் தானே செய்தது. அதேபோல - புலிகளுக்காக அதனைச் செய்பவர்கள் எல்.ரீ.ரீ.ஈ யினால் கூட மறுக்கமுடியாத அளவுக்கு அதனை உறுதிப்படுத்தி வருகிறார்கள்.

அதன்படி கேபி, தயா மாஸ்டர், மற்றும் தமிழினி போன்றோர், பிரிவினைவாத விடயத்தில் அயராது உழைத்தபோது அவர்களின் சொந்த உரிமையில் அவர்கள் கதாநாயகர்களாக போற்றப்பட்டார்கள் ஆனால் அவர்கள் தங்கள் அரசியல் நிலைப்பாட்டை நடைமுறைக்கு ஏற்றபடி இயல்பாக்கியபோது இல்லாவிடில் அரசாங்கத்தின் யுத்தத்துக்கு பிந்தைய மறு வாழ்வு நடவடிக்கையை பெற்றுக் கொண்டபோது, தமிழ்த்தேசிய யுடன் இணைந்து பணியாற்றி உள்ளன. எனினும் கொழும்பின் தெரிவு செய்யப்பட்ட அரசியல் அதிகாரத்தை யார் கைப்பற்றினாலும் தமிழரின் அரசியல் விதியுடன் ஒரு ராட்டின சுழற்சியில் ஈடுபடுவதாக ஒரு பிரதான குற்றச்சாட்டின் உள்ளடக்கம் அவர்கள்மீது இருக்கும்.

தேர்தலுக்குப் பின்னர் வடக்கில் ரி.என்.ஏ அரசாங்கம் அமைத்தாலும் இதே வழியில் பிரச்சினைகளை எதிர் கொள்ளலாம். அது எங்கும் நிறைந்திருக்கும் தமிழ் தேசியவாதிகளின் நிரந்தர அழுத்தத்துக்கு ஆளாகலாம்,



# யதார்த்தத்திலிருந்து வெளியே ஓட முயற்சிப்பவர்களை அம்பலப்படுத்த தமிழ் மக்கள் தயங்கக் கூடாது...



**கண்ணுக்குத் தெரியாத கை ஒன்று தமிழர்களின் தலைவிதியையும் மற்றும் ரி.என்.ஏ யின் போக்கையும் வழி நடத்துகிறது – ஒரு மறைவான கரம் மற்றும் பொறுப்போ அல்லது கணக்குகூற வேண்டிய தேவையோ இல்லாத ரி.என்.ஏ வகையான ஒரு பதற்றமான மனதும் அதனுடன் இணைந்துள்ளது. ரி.என்.ஏ யிடம் செயற்படும் கொள்கை, இலங்கை அரசாங்கம் மற்றும் அரசாங்கத் தலைமையினை எதிர்ப்பதும் மற்றும் எந்தக் காரணத்துக்காக வேண்டியாவது அரசாங்கத்தை எதிர்ப்பவர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதும்தான்.**

புறக்கணிப்பு செய்யும்படி தமிழர்களை எல்.ரீ.ரீ.ஈ வற்புறுத்தியும் உள்ளது. இந்த விடயம் காரணமாக தமிழர்கள் தங்கள் எதிர்கால குற்றச்சாட்டுகளை அரசாங்கத்தின் மீதோ அல்லது குறிப்பாக நாட்டிற்கு அருகிலுள்ள மற்றொன்றின் மீதோ ஒட்டவைக்கலாம் என எதிர்பார்க்க முடியாது. இன அவநம்பிக்கை ஆவியாவதற்கும் மற்றும் பரஸ்பர நம்பிக்கை உதயமாவதற்கும் இரு பகுதியினரும் சமரசத்துக்கான பங்களிப்பை நல்கி அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். வெறுமே சர்வதேச சமூகம் குறிப்பாக கடந்தகால சமநிலையற்ற மற்றும் நிறைவற்ற தகவல்கள் காரணமாக தமிழர்கள்மீது அனுதாபம் காட்டுகிறது என்பதனால், அவர்கள் உதவியால் இதிலிருந்து தப்பிக்க முடியும் என்பது அதன் கருத்தல்ல.

வாக்குகளைப் பங்கிடுவதிலுள்ள சதமானப் பிரச்சினைகள் சிங்கள அரசியல் பெரும்பான்மையினரின் மனச்சாட்சியை அதிகாரம் செய்கிறது, அதேபோல மிதவாத அரசியலில் உள்ள ரி.என்.ஏ தலைமையையும் அது அடக்கியாள்கிறது. தமிழர்கள் பக்கத்தில் எல்.ரீ.ரீ.ஈ க்கு பிந்திய தீவிர வாதிகளுக்கு அவர்கள் வேண்டப்படாத மனிதர்களாகி விட்டார்கள்.

டக்ளஸ் தேவானந்தா, கருணா, மற்றும் பிள்ளையான் ஆகியோர் எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டில் இருந்தபோதே அதை மீறி நடந்து கொண்டதால், வித்தியாசமான வகைப்படுத்தலின் கீழ் வருகிறார்கள். இப்போது வடமாகாண முதலமைச்சர் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்ட நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் உள்ளிட்ட உயர் மட்டத்திலுள்ள ஒரு சிறு பகுதியினரை தவிர மற்ற ஒவ்வொரு ரி.என்.ஏ தலைவருக்கும் ஒரு போராளிக் கடந்தகாலம் உள்ளது. எல்.ரீ.ரீ.ஈ யுடனான அவர்களது வேறுபாடு கருத்தியலிலோ அல்லது செயல்நுட்பத்திலோ இல்லை. அது தனிப்பட்டது.

களத்தில் ரி.என்.ஏ அடிமட்டத்தை சேர்ந்த நபர்களின் மனப்போக்கை அடிப்படையாக கொண்டே இயங்குகிறது. மற்றும் கண்ணுக்குத் தெரியாத கை ஒன்று அந்த மனநிலையை மற்றும் தமிழர்களின் தலைவிதியையும் மற்றும் ரி.என்.ஏ யின் போக்கையும் வழி நடத்துகிறது - ஒரு மறைவான கரம் மற்றும் பொறுப்போ அல்லது கணக்குகூற வேண்டிய தேவையோ இல்லாத ரி.என்.ஏ வகையான ஒரு பதற்றமான மனதும் அதனுடன் இணைந்துள்ளது.

தமிழர்களின் மனச்சாட்சி மற்றும் இன விசுவாசம் என்பனவற்றின் முகமற்ற பாதுகாவலர் சிறப்பான ஒரு படிக உருவமற்றவராக உள்ளார். ஒப்பீட்டளவில் எப்போதுமே சரியானதை செய்வதற்கான ஒத்துழைப்பை வழங்குவதைக் காட்டிலும், செய்யும் தவறுகளை வாய்ப்பாக்கி கொள்வதில் இலங்கை அரசாங்கம் மற்றும் ரி.என்.ஏ யும் மும்முர நிலையில் உள்ளன. வடக்கில் அதிகாரத்துக்கு தெரிவு செய்யப்பட்டால் அந்த சங்கீதத்தை ரி.என்.ஏ அதிகம் கேட்கவேண்டி இருக்கும். இந் நாட்களில் தற்போது ரி.என்.ஏ யிடம் செயற்படும் கொள்கை, இலங்கை அரசாங்கம் மற்றும் அரசாங்கத் தலைமையினை எதிர்ப்பதும் மற்றும் எந்தக் காரணத்துக்காக வேண்டியாவது அரசாங்கத்தை எதிர்ப்பவர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதும்தான்.

இந்த விடயத்துக்கு உதாரணமாக ரி.என்.ஏ ஆதரவும் தமிழ் வாக்குகளும் பொன்சேகாவுக்கு கிடைத்ததை சொல்லலாம். அதற்கு முன்னரும் மற்றும் பிறகும் தமிழ் மிதவாதிகள் அல்லது எல்.ரீ.ரீ.ஈ கூட அந்நாட்களில் ஏதோ ஒரு வழியில், பிரதான நீரோட்டத்தில் உள்ள சிங்கள எதிர்க்கட்சி அல்லது தலைமை, கொள்கைகள், மற்றும் பிரச்சினைகள் என்கிறவரிசையில் பெரும்பாலும் பிளவுபட்டு நிற்கலாம்.

இப்போது அல்லது எப்போதுமே அரசாங்கத்திலிருக்கும் பலருக்கு அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணி (ரி.யு.எல்.எப்) மற்றும் இப்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (ரி.என்.ஏ) என்பன தமிழ் பிரிவினை வாதத்தின் ஒரு மிதவாத முகமாகவே தோன்றுகிறது. வடக்கில் ரி.என்.ஏ அதிகாரத்துக்கு வந்தால், துப்பாக்கிகளும் குண்டுகளும் இல்லாவிட்டாலும், சாத்தியங்களும் கற்பாறைகளும் பரவியுள்ள இந்த குறுகிய பாதையூடாகவே பேச்சு வார்த் தைக்கு அழைக்கப்படும். இதை அடைவதற்கான சரியானதும் எளிமையானதுமான வழி கடந்த காலத்தை கைவிட்டு ஒரு சுத்தமான கற்பலகையிலிருந்து எழுத ஆரம்பிப்பதுதான், இன்னும் இந்த விடயத்தை அரசாங்கத்திடமும் சிங்கள ஆட்சியாளர்கள் மற்றும் சமூகத்தவர்களுக்கு முன் கொண்டு செல்வதற்கு முன்னர் பல தசாப்தங்களுக்கு முன்னரே எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பான மீள் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மீளச் சரிசெய்வதற்கு நேரமும் முயற்சியும் தேவைப்படும். முகம் தெரியாத தமிழ் தேசியவாதிகள் மற்றும் அவர்களின் புலம்பெயர் உறவுகளுடன் முதலும் கடைசியுமான இணைந்த ஒரு தெரிவாக இருக்கவேண்டும். அத்தகைய உள்வாங்குதல் பிரச்சினைகள் மற்றும் பிரத்தியேக அடிப்படையில் நடைமுறைக்கேற்ற ஒரு அரசியல் தீர்வை முன்னெடுப்பதற்கு ஏற்றவகையில் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை மற்றும் இசைவுபடல் வழியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

அப்படிச் செய்வதன் மூலமாக ரி.என்.ஏ சிங்கள அரசியல்வாதிகளையும் மற்றும் இலங்கை அரசாங்கத்தையும் பகைத்துக் கொள்ளாது. நல்லதோ அல்லது கெட்டதோ அது தமிழ் தேசியவாதிகள் அவர்கள் இதுவரை செய்து வந்ததை போல தொடர்ந்தும் யதார்த்தத்திலிருந்து வெளியே ஓட முயற்சித்தால் அவர்களை அம்பலப்படுத்த தயங்கக்கூடாது. எப்போதாவது மேற்கத்தைய அரைக்கோளத்தில் பனிக்கட்டி உருகும்போது, அவர்கள் முதல் விமானத்தில் ஏறி இனப்போரும் மற்றும் வன்முறைகளும் மரபுவழி அவர்களுக்கு வழங்கிய அவர்களின் வளர்ப்பு வீடுகளுக்கு திரும்பலாம்.

# கட்சிகள் அனைத்தும் வேட்பு மனுத்தாக்கல்

# வடக்கில் வெற்றிபெற்றுள்ளது அரசு

## அமைச்சர் டிலான் தெரிவிப்பு



(கொழும்பு)

வடமாகாணசபைத் தேர்தலுக்கு அனைத்துக்கட்சிகளும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்ததன் மூலம் அரசாங்கம் வடமாகாண தேர்தலில் இப்போதே வெற்றி பெற்று விட்டது என அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

வடமாகாணசபைத் தேர்தலை நடத்தக் கூடாது என்பதுதான் தமிழ்த தேசியக் கூட்டமைப்பின் நோக்க மாகவும் இருந்தது. இந்த நோக்கத்தை ஈடேற்றும் வகையில் தென் பகுதியிலுள்ள சில அடிப் படைவாதக் குழுக்களும் வடக்கில் தேர்தலை நடத்தாதே என கோஷங்களை எழுப்பின.

இன்னமும் வடமாகாணத்தில் அரசாங்கம் தேர்தலை நடத்தாது என்ற எண்ணத்திலேயே சிலர் இருக்கின்றனர். அரசாங்கம் மிகவும் வெற்றிகரமாகத்தேர்தலை நடத்துவதுடன் வடமாகாணத்தில் வெற்றியும் பெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் வடமாகாணத்துக்கு செல்ல முடியாதிருந்த விக்கினேஸ்வரன் கூட வட மாகாண சபையில் போட்டியிடுவதற்கு வேட்புமனுவை தாக்கல் செய்வதற்கான ஒரு சூழலை அரசாங்கம் இன்று ஏற்படுத்தியிருக்கிறது.

வட பகுதிக்கு செல்ல முடியாமல் கூட்டமைப்பினர் வெளியில் வராமல் ஒளிந்தே இருந்தனர். இன்று வெளியில் வந்து சுதந்திரமாகப் பேசுகின்றனர். வடக்கில் தேர்தல் நடைபெறக் கூடாது என்ற தேவை கூட்டமைப்புக்கு இருந்தது.

அதனைத் வைத்துக் கொண்டு வெளிநாடுகளில் பிரசாரம் செய்யவும் அவர்களுக்கு இயலும் என்பதால் அவர்கள் அவ்வாறு எண்ணம் கொண்டிருந்தனர்.

பிரபாகரன் இருந்த காலத்தில் பிரபாகரனின் எண்ணப்படி தென்பகுதியிலிருந்த சில அடிப் படைவாதிகள் சிங்கள மக்களை தமிழருக்கு எதிராக தூண்டியது போன்று இப்போதும் கூட்டமைப்பின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் செயற் படுகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நவிப்பிள்ளையை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் கேட்கும் பொன்சேகா



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் கோரிக்கை விடுப்பதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இந்த மாத இறுதியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை இலங்கையின் நிலைமைகள் குறித்து ஆராய இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ள நிலையில் பொன்சேகா இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

மேலும் கருத்து வெளியிட்ட சரத் பொன்சேகா, நாட்டில் உள்ள மோசடியான அரசியல்வாதிகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்த வேண்டும்.

யுத்தம் மேற்கொள்ளப்பட்டது தொடர்பாக சில பிரச்சினைகள் எழுந்துள்ளதால், போரை வழிநடத்தியவன் என்ற முறையில், அது குறித்து சரியான பதிலைத் தன்னால் மாத்திரமே வழங்க முடியும் எனவும் இதனால் நவநீதம்பிள்ளையை சந்திக்க சந்தர்ப்பம் வழங்கப் படாதது பிரச்சினைக்குரியது எனவும் கூறியுள்ளார்.

இராணுவத்தில் உள்ள மோசடியான அதிகாரங்களைப் பயன் படுத்தி அரசாங்கம், வடக்கில் அரசியல் நடத்தி வருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# காணி சுவீகரிப்பிற்கு எதிராக கதிர்காமரின் மகன் வழக்கு

யாழ்ப்பாணத்தில் காணி சுவீகரிப்பிற்கு எதிராக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அமரர் லக்ஸ்மன் கதிர்காமரின் புதல்வர் எஸ்.ஜே.கிறிஸ்டியன் கதிர்காமர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமது பூர்வீக காணிகளை சுவீகரிக்கும் முனைப்புக்கள் இடம்பெற்று வருவதாக அவர் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், யாழ்ப்பாண காணி சுவீகரிப்பு அதிகாரி, காணி அளவை அதிகாரி உள்ளிட்டோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப் பிடப்பட்டுள்ளனர்.

கடற்படைத் தளபதியாக நீண்ட காலம் கடமையாற்றிய அட்மிரால் ரஜாந்தன் கதிர்காமர், மிக இளவயதில் மேஜராக கடமை யாற்றிய செல்வநாதன் கதிர்காமர், பிரித்தானிய மஹாராணியின் விசேட பிரதிநிதி சாம் கதிர்காமர். ஆகியோர் தனது நெருங்கிய உறவினர்கள் என கிறிஸ்டியன் கதிர்காமர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இராணுவத் தேவைகளுக்காக தமது பூர்வீகக் காணிகளை சுவீகரிக்க உள்ளதாக காணி அமைச்சு அறிவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். தமது பூர்வீகக் காணியை சுவீகரிப்பதனை தடுக்க உத்தரவிடுமாறு அவர் நீதிமன்றிடம் கோரியுள்ளார்.

# கொழும்பு தெற்கு துறைமுகத்தை பொதுமக்கள் பார்வையிட அனுமதி



கொழும்பு தெற்கு துறைமுகத்தை பார்வையிடுவதற்கு எதிர்வரும் 8 முதல் 13 ஆம் திகதிவரை பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக துறைமுக நெடுஞ்சாலைகள் திட்ட அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

•400 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்ட கொழும்பு தெற்கு துறைமுகத்தின் முதற்கட்டத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாளை மறுதினம் திறந்து வைக்கவுள்ளார்.

கடலின் நடுவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கொழும்பு தெற்கு துறைமுகத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளை பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் நேரில் காணகால அவகாசம் வழங்குமாறு ஜனாதிபதி வழங்கிய ஆலோசனைக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

துறைமுகத்தின் இரண்டாம் கட்டப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு 2016 இல் துறைமுக விஸ்தரிப்புப் பணிகள் பூர்த்தி செய்யப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் விசனமடைகிறார் காணி அமைச்சர்



(கொழும்பு)

சில அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளைப் பார்க்கும் போது அவர்கள் பாடாலைகளுக்கு சென்றதில்லையோ என்று எண்ணத் தோன்றுவதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

தம்புள்ளையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் இதனைக் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் மண்டியிட்டிருக்கும் ஆசிரியர்களை எழுப்பும் போது, சிலர் சென்று மீண்டும் அந்த ஆசிரியர்களை மண்டியிட வைக்கின்றனர்.

சிலர் தமது கட்சியைச்சேர்ந்தவர்கள் மீதே தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

அதேவேளை எனது மகனை ரவுடியாக சித்தரித்து, அவரது பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

நான் பிள்ளைகளை சிறந்த முறையில் வளர்த்துள்ளேன் என்பதை உலகத்திற்கு அச்சமின்றி கூறுகின்றேன் என்றார்.

அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோனின் மகன் எதிர்வரும் மத்திய மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகிறார்.

அண்மையில் தம்புள்ளை பிரதேசத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த மற்றுமொரு வேட்பாளர் மீது தாக்குதல் நடத்தியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்த ஆர்ப்பாட்டக்காரர்களே காரணம்

## கம்பகா சம்பவம் குறித்து இராணுவம்

(கொழும்பு)


கம்பகா பிரதேசத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் இராணுவத்தினர் மீது பெற்றோல் குண்டுத்தாக்குதலை நடத்தியதனால் அவர்களை கலைக்கும் வகையில் துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

கம்பகா மாவட்டத்தின் வலிவேலியப் பகுதியிலுள்ள தனியார் நிறுவனமொன்றிலிருந்து வெளிவரும் நச்சுப்பொருட்களினால் நிலத்தடி நீர் மாசடைவதாகத் தெரிவித்து நேற்று முன்தினம் பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவேளை இராணுவம் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலியானதுடன் இருபதிற்கும் மேற்பட்டோர்காயமடைந்த நிலையிலேயே இராணுவப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நச்சுப்பொருள் வெளிவருவது தொடர்பாக அமைச்சர் பசில்ராஜபக்ஷ, பௌத்த பிக்குகள் மற்றும் குறித்த தனியார் நிறுவனத்தின் உரிமையாளர்கள், சுற்றுச்சூழல் ஆணையக அதிகாரிகளுடன் பொது மக்கள் பேச்சுவார்த்தையை நடத்தியிருந்தனர். இதன்போது குறித்த நிறுவனத்தின் தொழிற்சாலையை மூடுவதுடன், அப்பகுதி மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் குழாய்கள் மூலம் வழங்கவேண்டுமெனவும், அதற்கான செலவை அரசாங்கமே ஏற்க வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

எனினும், இந்தப் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்த நிலையிலேயே நேற்று முன்தினம் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வாறு ஆர்ப்பாட்டம் நடத்திய மக்கள் இராணுவத்தினர் மீது பெற்றோல் குண்டுத்தாக்குதலை நடத்தியதனால் அவர்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்த வேண்டி ஏற்பட்டதாகத் தெரிவித்துள்ள இராணுவப்பேச்சாளர் சர்ச்சைக்குரிய தொழிற்சாலையை தற்காலிகமாக மூடுவதாக ஒப்புக்கொண்டதனை அடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கலைந்து சென்றனர். எனினும் பின்னர் வந்த சிலர் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தினர். நிலைமையைக்கட்டுப்பாட்டிற்குள்கொண்டுவரமுடியாத நிலையில் பொலிஸார் இராணுவத்தினரின் உதவியை நாடியிருந்தனர். குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் பொலிஸார் இராணுவத்தினரின் உதவியை நாட முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.




புதிதாக இராணுவத்தளபதியாக நியமிக்கப்பட்ட லெப் ஜெனரல் தயாரத்னாயக்க நேற்று முன்தினம் அலரிமாளிகையில் ஜனாதிபதியை சந்தித்து நினைவுப் பரிசினை வழங்குவதனைக் காணலாம்.

# தனங்கிளப்பு பேருந்து சேவையை சீராக்குமாறு மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கோவிலாக்கண்டி, தனங்கிளப்பு மக்கள் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது, நாவற்குழி சந்தியிலிருந்து தனங்கிளப்பு வரையில் சேவையில் ஈடுபடும் வடபிராந்திய இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகள் அடிக்கடி பழுதடைவதாகவும் இதனால் பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள்,பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் அமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் குறித்த விடயம் தொடர்பாக துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வடபிராந்திய இலங்கைப் போக்குவரத்துச்சபையின் பிரதான பிரதிப் பொதுமுகாமையாளர் அஸ்ஹரிடம் பணிப்புரை விடுத்தார்.

தமது கோரிக்கை தொடர்பில் உடன் கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொண்ட அமைச்சருக்கு கோவிலாக்கண்டி, தனங்கிளப்பு மக்கள் பிரதிநிதிகள் நன்றி தெரிவித்துள்ளனர்.

## சைவசமய விவகாரக்குழுவினால் பேச்சுப்போட்டிக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை சைவசமய விவகாரக்குழுவின் ஏற்பாட்டில் பேச்சுப்போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இப்போட்டி இரண்டு பிரிவுகளாக நடாத்தப்படவுள்ளதுடன் பிரிவு 1. 10வயது தொடக்கம் 15வயது வரையும்,பிரிவு 2- 16வயது தொடக்கம் 21வயது வரையும் என இரு பிரிவுகளில் ஆண்,பெண் ஆகிய இருபாலாரும் கலந்து கொள்ளலாம். அனுமதி இலவசம்

போட்டி நிபந்தனைகளாக போட்டியாளர்கள் பதிவுகளை தொலைபேசி மூலம் மேற்கொள்ளவேண்டும்.

எமது கலாசாரத்தை மேம்படுத்துவதை மையப் பொருளாகக் கொண்டு 15நிமிடங்களுக்குள் பேச வேண்டும்.

போட்டிக்கு நேரடியாக குறிப்பிட்ட திகதியில் சமுகமளிப்பதுடன் போட்டியாளர்கள் தமது வயதினை உறுதிப்படுத்தும் ஆவணம் கொண்டு வரப்பட வேண்டும். பதிவுகளை -021-222-2275 / 021-222-2335 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு மேற்கொள்ள முடியும்.

ஒவ்வொரு பிரிவுக்கும் முறையே மூன்று பேருக்கு பெறுமதியான பரிசில் வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## மாணவர்களுக்கு உதவிகள்

வரணி வடக்கு ஜே/339 கிராம அலுவலர் பிரிவில் 10 வயதிற்குட்பட்ட (குடும்பத்தில் இரண்டுபேரை) சிறுவர்களுக்கு உதவி வழங்கும் வகையில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொண்டு நிறுவனத்தினூடாக இப்பதிவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன் இதன் முதற்கட்டமாக வடவரணி கௌரிபாலன் முன்பள்ளியில் வைத்து இம்மாணவர்களின் புகைப்படங்கள் தனித்தனியாக எடுக்கப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இப்பதிவுகளின் அடிப்படையில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு உதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (150)

## தொழில்சார் கற்கை நெறிகள்


(வடமராட்சி)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் பாடசாலையை விட்டு விலகிய இளைஞர்,யுவதிகளின் நன்மை கருதி தொழில்சார் கற்கை நெறிகளை நடாத்தவுள்ளது.

தமிழ் சுருக்கெழுத்து தட்டச்சு, தமிழ்தட்டச்சு, ஆங்கிலத் தட்டச்சு, கணனி (4மாதம்) கணனி தமிழ்த் தட்டச்சு, ஆகிய பயிற்சிகளுமே இங்கு ஆரம்பிக்கப்படவுள்ளன.

சிங்களமொழி,கணக்கியல் பயிற்சி நெறிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இடம்பெயர்ந்தோர், சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்ப இளைஞர் யுவதிகளுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும். இப்பயிற்சிநெறிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத் தலைவர் வைரவ.சிவச்சந்திரதேவன் தெரிவித்துள்ளார். (01)

## மாவிட்டபுரம் மக்களுக்கு புதிய குழாய்க் கிணறு



(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சம்மேளனத்தின் அனுசரணையுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் தெல்லிப்பளை பிரிவின் மாவிட்டபுரத்தில் மீள்குடியேறிய மக்களுக்காக குழாய்க் கிணறும்,நான்கு பம்பிகளும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

அண்மையில் குழாய்க்கிணறு மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இங்கு மீள்குடியேறியுள்ள மக்களுக்கு தண்ணீர் எடுப்பதற்கு ஏதுவாக 20லீற்றர் கொள்ளக் கூடிய 100 தண்ணீர் எடுக்கும் கான்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் தலைவர் கு.பாலகிருஷ்ணன், உபதலைவர் த.ரவிச்சந்திரன், தெல்லிப்பளைப் பிரிவுத் தலைவர் எஸ்.செல்வரட்ணம், செயலாளர் எஸ்.நாகேஸ்வரன், ஆகியோர் கலந்து கொண்டதுடன் இவர்களால் இச்செயற்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (பா)

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல்11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி மாலை 7 மணிக்கு மஞ்சமும்,16ஆம் திகதி மாலை 7 மணிக்கு கைலாச வாகனமும்,18 ஆம் திகதி மாலை 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும், 19ஆம் திகதி காலை 9 மணிக்கு இரதோற்சவமும் இடம் பெறவுள்ளது.

இதில் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 6.30 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது.

## முன்னோடிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயக்கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் தரம் 5 புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலைகளில் நடைபெறவுள்ளதாக யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

## ரம்ழான் நற்சிந்தனை



எந்த மனிதர் முஸ்லிமான தன் சகோதரரிடம் கோபம் கொண்டு மூன்று நாட்களுக்கு மேல் பேசாமலிருந்து அதே நிலையில் இறந்து விடுகின்றாரோ அவர் நேராக நரகத்திற்கு சென்று விடுகின்றார். என ரஸீல் (ஸல்) கூறியுள்ளார்கள்.

## கலை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனாவைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சை நிலையமும்,யாழ்.பொது வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடாத்தும் ஜம்பு மர நடுகையை ஊக்குவிக்கும் மாபெரும் கலை நிகழ்ச்சி எதிர்வரும் 10ஆம் திகதி நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலை நிகழ்வுக்குரிய நுழைவுச் சீட்டுக்களை (ரிக்கற்) நீரிழிவு நிலையம் போதனா வைத்தியசாலையில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## முரசின் இன்றைய பலன்



(03.08.2013 சனிக்கிழமை)

விஜய வருஷம் ஆடி மாதம் 18 ஆம் திகதி.துவாதசி திதி சித்தயோகம்
மிருகசீரிடம் பி.ப 1.43 வரைபின் திருவாதிரைநட்சத்திரம்
இராகுகாலம 09.04- 10.34 வரை. சுபநேரம 03.04- 04.34 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சகோதரர் ஒற்றுமையைக் கெடுக்க முயலல். காது நோய் குணமடைதல்,கள்ள நாணயத்தால் காவல் துறைக்கு செல்லல். |
| ரிஷபம் | விட்டுக் கொடுக்காமையினால் காரிய நாசம், தற்காலிகமாக வெளியூர் பயணத்தை ஒத்தி வைத்தல்,புலன் விசாரணையின் பின் திருமணம் கைவிடல். |
| மிதுனம் | அடாத்தாக நிலத்தில் குடியேற நினைப்பு.தீடீர் சிநேகித உறவில் எச்சரிக்கை, மக்களின் உயர்வு பற்றிய சுபசெய்தி. |
| கடகம் | பயணம் செல்லும் இரண்டுங்கெட்டான் நிலை, தாயாரின் தேகநலப்பாதிப்பு,திருடனிடமிருந்து நகைகள் அருந்தப்பு. |
| சிம்மம் | கணக்கினைப் பேணாமையால் தண்டம்,சுவீப்பில் பணத்தொகை,புதிய ஜீவனின் வருகை,மின் ஒழுக்குப்பற்றி எச்சரிக்கை. |
| கன்னி | புதிய வீட்டுத்திட்டத்திற்கு பச்சைக்கொடி, தலைக்கவசம் அணியாமையினால் தண்டம், பெற்றோல் மண்ணெண்ணைக் கலப்பினால் தீச்சேதம். |
| துலாம் | நீதிமன்ற முடிவு சாதகமாகும் நிலைப்பாடு, வாகனம் கட்டுப்பாட்டை இழந்து விபத்து, பொறுமையைக் கடைப்பிடித்தனால் காரியசித்தி. |
| விருச்சிகம் | குடியுரிமை கிடைக்கும் நம்பிக்கை, சொத்துப் பிரச்சினைக்கு காவல்துறை நாடல், பணவரவு. |
| தனுசு | வாகனத்திற்கு குறுக்கே பாயும் மிருகங்களால் விபத்து, தனியார் துறையில் வேலை கிடைக்கும் சந்தர்ப்பம், பல்நோயால் அவதி,சுவிப்பில் பணம். |
| மகரம் | ஆவணம் கொண்டு செல்லாமையால் தண்டம், நீண்டநாட்பகை முற்றுப்பெறல், இயந்திரத் தொல்லையால் பிரயாணம் தாமதமாதல். |
| கும்பம் | எதிர்பார்த்த பணவரவு சேரல், விற்பனையாகாது தேங்கும் நிலை, சரியாக பணத்தைக் கணக்கிடாமையினால் நட்டம். சூதாட்டத்தினால் தண்டம். |
| மீனம் | கவனக்குறைவினால் வாகனம் திருட்டு, வழி காட்ட வந்தவரால் உடைமை சூறையாடல். விளையாட்டுத்துறையில் சாதனை. |

## தத்தெடுப்பு

(புதுடில்லி)

விலங்குகள் மீது பிரியம் கொண்ட இந்திய அணிக் கப்டன் டோனி, புலிக்குப் பின்னர் இப்போது நாய்க் குட்டியைத் தத்தெடுத்துள்ளார்.

பெரும்பாலும் மோட்டார் சைக்கிள்கள் மீது ஆர்வம் கொண்ட கப்டன் டோனி, விலங்குகள் மீதும் பாசம் வைத்திருப்பார்.பல்வேறு ரக மோட்டார் சைக்கிள் வைத்துள்ள இவர், கடந்த 2011இல் மைசூரு உயிரியல் பூங்காவில் இருந்து 9 வயதான புலியைத் தத்தெடுத்தார். இதற்கு அகஸ்தியா என்று பெயர் வைத்துள்ளார்.

இப்போது சிம்பாப்வே தொடரில் பங்கேற்காமல் ஓய்வு எடுக்கும் டோனி, தின்மும் "டுவிட்டரில்" பல செய்திகளை வெளியிட்டு அசத்துகிறார். இதனிடையே, ராஞ்சி விலங்குகள் அறக்கட்டளையில் இருந்து புதிதாக நாய்க் குட்டி ஒன்றை த்த்தெடுத்துள்ளார்.

இதன் போட்டோவை டுவிட்டரில் வெளியிட்ட டோனி கூறுகையில், புதிதாக தத்தெடுத்த பெண் நாய்க் குட்டியை லியா என அழைக்கலாம் என்றார். மோட்டார் சைக்கிள் குறித்து டுவிட் டர் செய்தியில் தெரிவித்துள்ள டோனி, முதன் முதலாக ரூ. 4500இக்கு மோட்டார் சைக்கிள் வாங்கினேன்.இதன் போட்டோவை இன்று வெளியிடலாம் என்று நினைத்துள்ளேன். அது மோசமாக இருக்கும் என, தெரிவித்தார்.

மற்றொரு டுவிட்டரில், கடையில் சென்று வாங்குவதை விட, வீடுகளுக்குச் சென்று டெலிவரி செய்யும் போது, குறைந்த விலையில் இருக்குமாறு உள்ள பொருட்கள் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள் என்று இரசிகர்களிடம் கேட்கிறார் டோனி.

## முழுமையாகக் கைப்பற்ற வேண்டும்



சிம்பாப்வே அணியுடனான ஒரு நாள் தொடரை முழுமையாகக் கைப்பற்றிக்கொள்ள விரும்புகின்றோம் என இந்திய அணிக் கப்டன் ஹோலி தெரிவித்துள்ளார்.

ஆடுகளம், ஆரம்பத்தில் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக காணப்பட்டது. எங்களது பந்து வீச்சாளர்கள் தங்கள் பணியை மிகச்சிறப்பாக செய்துள்ளனர். மொகித் சர்மா உண்மையிலேயே அபாரமாக பந்து வீசினார். தனது முதல் ஆட்டத்திலேயே அவர் மிக நுணுக்கமாக பந்து வீசியதை பார்க்க மகிழ்ச்சியாக இருந்தது. அவரால் நாங்கள் பெருமைப்படுகிறோம். அணியில் சில நல்ல களத்தடுப்பாளர்கள் இப்போது இருக்கிறார்கள். அதில் ரவீந்திர ஜடேஜாவும் ஒருவர். இந்தத் தொடரை வெற்றியுடன் முடிக்க (5-0) விரும்புகிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தோல்வி குறித்து சிம்பாப்வே கப்டன் பிரண்டன் டெய்லர் கூறுகையில், துடுப்பாட்டத்திற்கு ஏதுவான ஆடுகளத்தில் இவ்வளவு மோசமாக ஆடியது மிகவும் ஏமாற்றம் அளிக்கிறது. இந்தத் தொடருக்காக நாங்கள் கடினமாக உழைத்தோம். ஆனால் அதைக் களத்தில் செயற்படுத்த முடியவில்லை. ஒவ்வொரு முறையும் மிக எளிதான முறையில் விக்கெட்டுகளை இழந்து பணிந்து விடுகிறோம்.

தோல்வியை எப்படி முடிவுக்கு கொண்டு வருவது என்பதை கண்டுபிடிக்க முடியாமல் தடுமாறுகிறோம். இன்னும் ஒரு ஆட்டம் இருக்கிறது. கடைசி ஆட்டத்தில் எங்களது நாட்டு இரசிகர்களின் முகத்தில் கொஞ்சம் மகிழ்ச்சியைக் கொண்டு வர முடியும் என்று நம்புகிறேன் என்றார்.

## உலக சாதனையுடன் தங்கம்




(பார்சிலோனா)

பார்சிலோனாவில் நடந்த உலக நீச்சல் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் கேட்டி டெடிஸ்கி உலக சாதனை படைத்து தங்கம் வென்றார்.

ஸ்பெயினில் உள்ள பார்சிலோனாவில் 15ஆவது உலக நீச்சல் சம்பியன்ஷிப் தொடர் நடைபெற்றது. நேற்று முன்தினம் நடந்த பெண்கள் 1500 மீற்றர் பிரீஸ்டைல் பிரிவு இறுதிப் போட்டியில், அதிவேகத்தில் நீந்திய அமெரிக்காவின் கேட்டி டெடிஸ்கி, 15.36.53 வினாடிகளில் கடந்து உலக சாதனை படைத்து, தங்கப் பதக்கத்தை தட்டிச் சென்றார்.

இதற்கு முன் இப்பிரிவில் அமெரிக்காவின் கேட் ஜீக்லர் 15.42.54 வினாடிகளில் கடந்ததே உலகசாதனையாக இருந்தது. இப்போட்டியில் டென்மார்க்கின் லோட் பிரில்ஸ் (15.38.88) வெள்ளிப்பதக்கமும், நியூசிலாந்தின் லோரன் பொயில்(15.44.71) வெண்கலப்பதக்கமும் வென்றனர்.

## காலிறுதியில் மார்டினா ஜோடி



கலிபோர்னியா ஓப்பன் ரென்னிஸ் தொடரின் காலிறுதிக்கு சுவிஸின் மார்டினா ஹிங்கிஸ், சுலோவாக்கியாவின் டேனிலியா ஜோடி முன்னேறியது. அமெரிக்காவில் உள்ள கொர்ல்ஸ்பாத் நகரில் கலிபோர்னியா ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் பெண்கள் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் முன்னாள் முதல்நிலை வீராங்கனையான சுவிஸின் மார்டினா ஹிங்கிஸ், சுலோவாக்கியாவின் டேனிலியா ஜோடி, ஜேர்மனியின் ஜூலியா ஜார்ஜஸ், குரோசியாவின் தரிஜா ஜோடியைச் சந்தித்தது. இதில், ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய ஹிங்கிஸ் ஜோடி முதல் செட்டை 6-1 என கைப்பற்றியது. தொடர்ந்து அசத்திய ஹிங்கிஸ் ஜோடி இரண்டாவது செட்டையும் 6-1 என எளிதாக தன்வசப்படுத்தியது.முடிவில், மார்டினா ஹிங்கிஸ், டேனிலியா ஜோடி 6-1, 6-1 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு தகுதி பெற்றது.

இதேவேளை, மகளிர் ஒற்றையர் 2ஆவது சுற்றில் தரவரிசையில் 3ஆவது இடத்தில் உள்ள அசரென்கா 6-2, 6-3 என்ற நேர் செட்களில் இத்தாலியின் பிரான்செஸ் கூஷியாவோனேவை வீழ்த்தினார். விம்பிள்டன் ரென்னிஸ் பேரட்டியின்போது ஏற்பட்ட காயம் காரணமாக முதல் சுற்றோடு வெளியேறிய அசெரன்கா, அதன்பின்னர் இப்போதுதான் மீண்டும் ரென்னிஸக்கு திரும்பியுள்ளார். தரவரிசை அடிப்படையில் நேரடியாக இரண்டாவது சுற்றில் விளையாடும் வாய்ப்பைப் பெற்ற அசரென்காவுக்கு, இந்த வெற்றி அவருடைய பிறந்தநாள் பரிசாகவும் அமைந்தது. புதன்கிழமை அவருடைய 24ஆவது பிறந்த நாளாகும்.

## கடின உழைப்பிற்கு கிடைத்த பரிசு



மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ஒரு நாள் மற்றும் ருவென்ரி-20 போட்டித் தொடரை நாம் வென்றமை அணியின் கடின உழைப்புக்கு கிடைத்த சிறந்த பரிசு என பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீரர் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ஒரு நாள் தொடரில் சூதாட்டம் நடந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளது, இதை யார் பரப்பினார்கள் என்று தெரியவில்லை. இப்படிக் கூறுவதால் எங்களது மன வலிமை ஒன்றும் குறையப்போவதில்லை. இந்த வெற்றி எங்கள் கடின உழைப்பிற்கு கிடைத்த பரிசு. மீண்டும் அணியில் இடம்பிடித்து வெற்றிக்கு பங்காற்றியதில் மகிழ்வடைகின்றேன். ஓய்வு குறித்து நான் தற்போது சிந்திக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சயிட் அஜ்மல் குறிப்பிடுகையில், ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் போட்டியில் எங்களின் செயற்பாடு மோசமாக இருந்தது.

எனவே மேற்கிந்தியதீவுகள் அணிக்கு எதிரான தொடரில் வெற்றி பெற கடுமையாகப் போராடினோம். அதற்குரிய பலன் எங்களுக்கு கிடைத்திருப்பதில் மகிழ்ச்சி.

அந்த அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்துவது எளிதான காரியமல்ல, இந்த வெற்றியை எண்ணி நாங்கள் பெருமை அடைகிறோம். உள்ளூரிலும் வலுவான வீரர்கள் உருவாக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் அடுத்த உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணி சிறந்த அணியாக விளங்கும் என்று நம்புகின்றேன எனத் தெரிவித்துள்ளார்.

## சர்ச்சையின் மன்னன்



அடிக்கடி சர்ச்சைகளில் சிக்கிக் கொள்வது ஆர்ஜென்ரீனாவின் முன்னாள் பிரபல கால்பந்தாட்ட வீரர் டிகோ மரடோனாவின் வாடிக்கை. தற்போது பத்திரிகை புகைப்படக் கலைஞர் என்ரிக் மெடினாவைத் தாக்கியதாக அவர் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

1986ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை இவரது தலைமையில், தான் ஆர்ஜென்ரீனா கைப்பற்றியது. 1986ஆம் ஆண்டு புகைப் படத்தை பெறுவதற்காக மரடோனாவின் தந்தையின் வீட்டில் புகைப்படக் கலைஞர் காத்திருந்தபோது அவரை மரடோனா தாக்கியுள்ளார்.

1994ஆம் ஆண்டு மரடோனா நிருபர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. 2010ஆம் ஆண்டு உலகக்கிண்ணக் காலிறுதியில் ஆர்ஜென்ரீனா 0-4 என்ற கணக்கில் ஜேர்மனியிடம் மோசமாகத் தோற்றது. அப்போது மரடோனா பயிற்சியாளராக இருந்தார்.


## வலுவான நிலையில் ஆஸி.

(மான்செஸ்டர்)

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டியில் கப்டன் கிளார்க் சதம் கடந்து அசத்த, அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸில் 303 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையைப் பெற்றுள்ளது.

இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்ரேலிய அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதலிரண்டு போட்டியில் வென்ற இங்கிலாந்து அணி 2-0 என, முன்னிலையில் உள்ளது. மூன்றாவது போட்டி நேற்று முன்தினம் மான்செஸ்டரில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய அவுஸ்ரேலிய அணி சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றது. வட்சன், கிறிஸ் ரோஜர்ஸ் ஜோடி சிறந்த ஆரம்பத்தைப் பெற்றுக்கொடுத்தபோதும் 76 ஓட்டங்களைப் பெற்றவேளை இந்த ஜோடி பிரிக்கப்பட்டது. தொடர்ந்து கப்டன் கிளார்க், ரோஜர்ஸ் சிறப்பாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். இறுதியில் முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை அவுஸ்ரேலிய அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 303 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் கப்டன் கிளார்க் ஆட்டமிழக்காது 125 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் கிளார்க் பெற்றுக்கொண்ட 24ஆவது சதமாக இது அமைந்தது. மற்றும் ரோஜர்ஸ் 84, ஸ்மித் ஆட்டமிழக்காது 70 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்வான் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



# தேசியத்தில் வாகை சூடிய மன்னார் அணிக்கு உற்சாக வரவேற்பு





(மன்னார்)

தேசிய மட்ட கால்பந்தாட்டப் போட்டியில் வெற்றிவாகை சூடிய மன்னார் மாவட்ட அணிக்கு மன்னார் மாவட்ட அரச செயலகத்தினால் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்பட்ட 25ஆவது இளைஞர் விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக இடம்பெற்ற கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த 26ஆம் திகதி பொலநறுவையில் இடம்பெற்றது.

இதில் மன்னார் மாவட்டம் சார்பாக பனங்கட்டிக்கொட்டு புனித சூசையப்பர் அணி தகுதி பெற்றதுடன் யாழ். மாவட்ட அணியை தோற்கடித்து கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தேசிய மட்டப்போட்டியில் வெற்றி வாகை சூடிய மன்னார் மாவட்டத்திற்கு பெருமை சேர்ந்த பனங்கட்டிக்கொட்டு புனித சூசைப்பர் அணிக்கு கடந்த திங்கட்கிழமை உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டு கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் நுழை வாயிலில் இருந்து ஊர் வலமாக வெற்றி வீரர்கள் அழைத்து வரப்பட்டு மன்னார் மாவட்டச் செயலகம் வரை மேள தாளத்துடன் ஊர்வலம் சென்றது. மன்னார் அரச செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் தேசப்பிரியா, உதவி அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமெல் மற்றும் மாவட்டச் செயலக அதிகாரிகள் குறித்த வீரர்களை கௌரவித்தனர். பின் மன்னார் பொது விளையாட்டு மைதான வீதியூடாகச் சென்ற வெற்றி வாகை சூடிய வீரர்கள் மன்னார் பனங்கட்டிக்கொட்டு புனித சூசையப்பர் விளையாட்டுக்கழகத்தினை சென்றடைந்தனர். இதனைத் தொடர்ந்து அங்கு பாராட்டு நிகழ்வுகள் இடம் பெற்றது. குறித்த நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாகாணப் பணிப்பாளர் என்.எம்.முனவ்பர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விளையாட்டுச் செய்திகள்

## தொடரும் தோல்வி இன்று இறுதிப் போட்டி

(புலவாயோ)

இந்திய, சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதிப்போட்டி இன்றைய தினம் 12.30 மணிக்கு சிம்பாப்வேயின் புலவாயோவில் இடம்பெறவுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற நான்காவது போட்டியிலும் சிம்பாப்வே அணி படுதோல்வியடைந்தது. புலவாயோவில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய சிம்பாப்வே அணி வழமைபோன்று சொதப்பல் ஆட்டத்தை வெளிப்படுத்தி விக்கெட்டுக்களை விரைவாகப் பறிகொடுத்தது. இதில் சிக்கும்புறா ஒரு முனையில் விக்கெட்டை காத்து நின்ற போதும் மறுமுனையில் விக்கெட் சரிவை சிம்பாப்வே வீரர்களால் நிறுத்த முடியவில்லை. இறுதியில் சிம்பாப்வே அணி 42.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 144 ஓட்டங்களைப்பெற்றது. இதில் சிக்கும்புறா ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் சிபாண்டா 24, வோலர் 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மிஸ்ரா மூன்று, எம். சர்மா, ஜடேஜா தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 145 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி 30.5 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ரோகித் சர்மா 64, சுரேஷ் ரெய்னா 65 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். போட்டியின் ஆட்டநாயகனாக எம். சர்மா தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகளைக்கொண்ட ஒரு நாள் தொடரில் இந்திய அணி 4-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

இதேவேளை, தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் புலவாயோவில் இடம்பெறவுள்ளது. இப்போட்டியில் ஆறுதல் வெற்றியைப் பெற்றுக்கொள்ள சிம்பாப்வே அணி போராடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## பருத்தித்துறையில் நாளை மென்பந்து இறுதிப் போட்டி

பருத்தித்துறை குரும்பசிட்டி உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதிப்போட்டி நாளை ஞாயிற்றுகிழமை உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

5 ஓவர்கள் கொண்ட இப்போட்டித்தொடரின் இறுதிப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் அணி மோதவுள்ளது.

10 ஓவர்கள் கொண்ட இறுதிப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து வதிரி ஸ்ரீமுருகன் அணி மோதவுள்ளது.

## விரைவில் மாவட்டப் போட்டி

மஞ்சிக் கிண்ண கரப்பந்தாட்டத் தொடரின் மாவட்டப் போட்டிகள் விரைவில் இடம்பெறவுள்ளதாக யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் தெரிவித்துள்ளது. பிரதேச ரீதியிலான மஞ்சி கிண்ணக் கரப்பந்து தொடர் நிறைவடைந்துள்ள நிலையில் மாவட்ட மட்டப் போட்டிக்கான அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், விரைவில் போட்டிகள் இடம்பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## மாகாண விளையாட்டு விழா இன்று இறுதி நாள்

(வவுனியா)


வடமாகாண விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படுகின்ற மாகாண மட்ட விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்றைய தினம் 2.00 மணிக்கு வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற இப்போட்டி நிகழ்வுகள் கடந்த 1ஆம் திகதி முதல் இடம்பெற்று வருகின்றது. இதில் ஏற்கனவே பெரு விளையாட்டுப்போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில், கடந்த இரு தினங்களாக தடகளப் போட்டி வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீர,வீராங்கனைகள் தனது திறமைகளை வெளிப்படுத்தி மாவட்டத்திற்கு புள்ளிகளைச் சேர்ந்து வருகின்றனர்.

இன்றைய தினம் இடம்பெறும் இறுதி நிகழ்வில் முதலிடத்தைப் பிடித்துக்கொள்ள ஐந்து மாவட்டங்களும் முனைப்புடன் செயற்பட்டு வருவதாகவும், கடந்த காலங்களுடன் ஒப்பிடுகின்ற போது, வீர,வீராங்கனைகளின் திறன் பல மடங்கு அதிகரித்திருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)





நவாலி பிரசாத் ஞாபகார்த்த முன்பள்ளியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நிலைய முன்றலில் சிறப்புற நடைபெற்றது. இதில் பலூன் உடைத்தல், பழம் பொறுக்குதல், யானைக்குக் கண் வைத்தல், ஓட்டம், வினோத உடை போன்ற பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றது. முன்பள்ளி ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் பிரதேச அமைப்பாளர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா), ஓய்வு பெற்ற அதிபர் நாகையா ஆகியோர் கலந்து கொண்டு போட்டியில் பங்குபற்றிய அனைத்து சிறார்களுக்கும் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தனர். இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், கிராமப் பெரியோர், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறார்களை உற்சாகமூட்டினர். இதில் சிறார்களின் வினோத உடைப்போட்டி நிகழ்வையும், சிறார் ஒருவருக்கு ஓய்வுபெற்ற அதிபர் நாகையா பரிசு வழங்குவதையும் காணலாம். (54)



**செய்தி:** கடந்த யுத்த காலத்தின் போது வடக்கு, கிழக்கில் காணாமற் போனோர் தொடர்பான ஒரு விசாரணை ஆணைக்குழுவை அமைக்கும் படி ஜனாதிபதி அவரது செயலாளர் லலித் வீரதுங்க

வரவிருக்கும் வேளையில் எதற்காக இந்த அரசாங்கம் அக்கறை காட்டுகிறது என கேள்வியும் எழுப்பியுள்ளார். மேலும் அரசாங்கம் வீணான செலவுகள் செய்து இந்த ஆணைக்குழுவை அமைத்து காலத்தை ஏன் விரயம் செய்ய வேண்டும் என்றும் அவர் அக்கறையோடு கேள்வியெழுப்பியுள்ளதையும் அச்செய்தி தெரிவிக்கின்றது.

**முனியின் சங்கடம்:**

படி கேட்டு நாடுநாடாகத் திரிந்தார்கள். தாங்கள் சொன்னபடி கேட்டுத்தான் அமெரிக்கா ஜெனீவாவுக்கு தீர்மானத்தைக் கொண்டு வந்தது இந்தியா தம்மைக் கேட்டுத்தான் அதற்கு ஆதரவளித்தது என தமது சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த வல்லமைகளையும் யாழ்ப்பாணப் பத்திரிகைகள் மூலமாக அனைத்து உலக சமூகங்களுக்கும் சொல்லிக் காட்டி தமது தீர்க்கதரிசனம் பற்றி பெருமிதம்

பெண்கள் மற்றும் பிள்ளைகள் தங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதைக் கேட்டு இந்த ஆணைக்குழுவில் தாமே நேரடியாகக் குரலெழுப்ப முடியும். தாங்கள் அறிந்த கட்டம் வரை தங்கள் உறவுகளைக் கடத்தியவர்கள் யார்? காணாமற் பண்ணியவர்கள் யார்? அவை தொடர்பாக தம்மால் சந்தேகிக்கப்படுபவர்கள் யார்? என்பதையெல்லாம் பகிரங்கமாக இந்த ஆணைக்குழு மூலம் உலகறிய வெளிப்படுத்த முடியும்.

தேசியக் கூட்டமைப்பு கோர வேண்டியதன் அவசியம் என்ன என்று தெரியாமல் தலை சுற்றி நிற்கிறது சகடமுனி.

உண்மையில், காணாமற் போனோர் தொடர்பாக அரசாங்கத்திடமுள்ள விபரங்கள் வெளியிடப்பட வேண்டும் எனக் கோருகின்ற அதேவேளை ஏற்கனவே பதின்மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கிழக்கு மாகாணத்தில் பதினொரு மாகாணசபை உறுப்பினர்களையும் உள்ளூராட்சி மட்டத்தில்

# சகடமுனியின் விகடசங்கடம் - - முனிதாசபூதன்

**(இணையத்தளக் கட்டுரையிலிருந்து)**

வுக்கு உத்தரவிட்டுள்ளார். திரு. லலித் வீரதுங்க அவர்கள் கடந்தகால அநுபவங்களிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளல் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான கமிட்டியின் பிரதான உறுப்பினருமாவார். இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களில் பிரதம பேச்சாளரான திரு. சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் கருத்துக் கேட்டபோது அவர் இந்த ஆணைக்குழுவை தமிழர்களோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அங்கீகரிக்க மாட்டாது என அறிவித்திருப்பதாக இலங்கையின் பிரதான ஆங்கில வாரப் பத்திரிகைகளில் ஒன்றான சண்டே லீடர் செய்தி வெளியிட்டுள்ளது. திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள் மேலும் குறிப்பிடுகையில், இந்த ஆணைக்குழுவில் யார் யார் நியமிக்கப்படப் போகிறார்கள் என தமக்குத் தெரியும் என்றும் அது இராணுவ அதிகாரிகளையோ அல்லது அரசியற் கையாட்களையோ கொண்டதாகத்தான் இருக்கும் என்றும் ஆரூடம் கூறியுள்ளார். அத்துடன் கடந்த இரண்டு வருடங்களாக இதில் அக்கறை காட்டாத அரசாங்கம் இப்போது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் இலங்கைக்கு

கடந்தகால அனுபவங்களிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்வதற்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றும்படி சர்வதேசநாடுகள் இலங்கை அரசை வலியுறுத்த வேண்டித்தான் இவர்கள் டில்லி, வாஷிங்டன், லண்டன், ஜெனீவா எனச் சென்று வேண்டிக் கொண்டார்கள். அதை அரசாங்கம் செய்யவில்லை என்று அடிக்கடி குறையும் சொன்னார்கள் குற்றமும் சாட்டினார்கள். இப்போது ஜனாதிபதி காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கென ஒரு விசாரணை ஆணைக்குழுவை அமைப்பதற்கு உத்தரவிட்டுள்ளதை எதிர்க்கிறார்கள். கற்றுக்கொள்வதற்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு அமைக்கப்பட்ட காலத்திலும் இப்படித்தான் இவர்கள் பயனற்றது முறையற்றது எனக் கூறினார்கள். அந்த ஆணைக்குழுவின் முன்னால் சென்று கடந்த காலங்களில் நடந்தவைகள் தொடர்பாக தமது வாக்குமூலங்களைப் பகிரங்கப்படுத்துவதற்குத் தயாராக இல்லாமல் அதனைப் புறக்கணித்து, தமது புறக்கணிப்புக்கான நியாயங்களையும் கூறினார்கள். பின்னர் அதே ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றும்

கொண்டார்கள்.

ஒரு விடயம் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவை அமைக்கும் எந்தவொரு அரசாங்கமும் தனக்குச் சரியானவர்கள் எனப்படுபவர்களை நியமிப்பதே வழக்கம். இது பொது அறிவு. இவர்கள் கூறுவதுபோல இன்றைய சூழலில் சர்வதேச சமூகத்துக்குக் காட்டவே இந்த ஆணைக்குழு அமைக்கப்பட உள்ளது என்று பார்த்தாலும் இராணுவ அதிகாரிகளையோ அல்லது அரசியற் கையாட்களையோ நியமிக்கும் அளவுக்கு அரசாங்கம் முட்டாள்த்தனமாக நடந்து கொள்ளப்போவதில்லை என்பதுவும் சாதாரண பொது அறிவு. அதில் இளைப்பாறிய முன்னாள் நீதிபதிகளை-யோ அல்லது பொதுவாக பகிரங்கத்தில் நன்மதிப்பைப் பெற்ற பிரமுகர்களையோதான் அரசாங்கம் நியமிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆணைக்குழுவை அரசாங்கம் எதற்காக இந்த நேரத்தில் அமைக்க உள்ளது அதன் மூலம் அரசாங்கம் எதனைச் சாதிக்க உள்ளது என்ற கேள்விகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட காணாமற் போன தங்களது பிள்ளைகள் பற்றியும் கணவன்மார் பற்றியும் தந்தையர் பற்றியும் கடந்த பல ஆண்டுகளாக எந்தத் தகவலும் தெரியாமல் கண்ணீரில் வாழ்ந்து கொண்டிருக்கும் தாய், தந்தையர்கள்,



அதனால் வெளியிடப்படும் தொகுப்பாவணம் அல்லது இந்த ஆணைக்குழுவின் முன் பாதிக்கப்பட்டவர்கள் வெளிப்படுத்தும் சாட்சிய வாக்குமூலங்களைத் தொகுப்பவர்களால் வெளிக்கொணரப்படும் ஆவணங்கள் ஒரு பெரும் அவலத்தின் உண்மைகளை வெளிக்கொண்டு வருபவையாக அமையும். எனவே அப்படியான ஒரு சந்தர்ப்பத்தை எதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணிக்க வேண்டும்; தமிழர்கள் ஏன் அதனை அங்கீகரிக்கக் கூடாது; பாதிக்கப்பட்டவர்கள் அந்த ஆணைக்குழு முன்னால் ஏன் தமது சாட்சியங்களை அளிக்கக் கூடாது என தமிழ்த்

ஐந்நூறு பேருக்கு மேல் உறுப்பினர்கள் வேட்பாளர்கள் எனவும் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யுத்தம் முடிந்து கடந்த நான்கு ஆண்டுகளுக்குள் தன் சொந்த முயற்சிகளின் மூலம் வடக்கு, கிழக்கில் கடந்த முப்பது ஆண்டுகால யுத்தத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் பெயர் இடம் காலம் மற்றும் சம்பவங்கள் தெரிந்தவர்கள் தரும் விபரம் என முழுத் தகவல்களையம் திரட்டி ஒரு பேராவணத்தை வெளிக் கொண்டுவந்திருக்கமுடியும். தாம் வாக்கு வேண்டிய மக்களுக்காகச் செய்ய வேண்டியதைச் செய்யாதது மட்டுமல்ல இப்போது அப்படியொரு ஆவணம் வெளிவருவதற்கு வாய்ப்பைத்தரக்கூடிய ஒரு ஆணைக்குழுவையும் வேண்டாம் என்கிறார்கள்.

காணாமற் போனோர் தொடர்பாக பொத்தாம் பொதுவாக அரசுக்கு எதிராக நாலு சுலோகங்களை பத்து மட்டைகளில் எழுதி ஏந்தி அவ்வப்போது ஐந்து மணித்தியால உண்ணாவிரதம் நடத்தும் இவர்களுக்கு அந்த சுலோக மட்டைகள் இந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்குப் பின்னர் பயனற்றுப் போய்விடுமே என்று கவலை கொள்கிறா சுரேஷ் என்று கேள்விக்கு மேல் கேள்விகள் எழும்ப ஒன்றும் புரியாமல் நிற்கிறது சகடமுனி.


## புற்றுநோய்: புதிய கருவி!

**பு**ற்றுநோய் பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளும் போது புற்றுநோய் பாதித்த திசுக்களை மட்டும் துல்லியமாக அகற்றும் ஒரு புதிய வகை கருவியை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். புற்றுநோய் தாக்கிய திசுக்களை முழுவதுமாக அறுவை சிகிச்சை செய்து அகற்றுவது என்பது இன்றைய காலத்தில் இயலாத காரியமாகும்.

இதனால் புற்றுநோய் பாதித்த நோயாளிகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்த போதிலும் மீண்டும் புற்றுநோய் தாக்கும் அபாயமும் இருந்து வந்தது. இதனையடுத்து புற்றுநோய் திசுக்களை சரிசெய்ய தற்போது கண்டுபிடித்துள்ள இந்த புதிய வகை கருவியால் புற்றுநோய் பாதித்த திசுக்களை மற்ற திசுக்களில் இருந்து பிரித்து காட்ட முடியும் அதனால் அவற்றை மிக துல்லியமாக நீக்கலாம். இதனால் புற்றுநோய் பாதித்து அறுவை சிகிச்சை மேற்கொண்டவர்களுக்கு மீண்டும் புற்றுநோய் தாக்கும் அபாயம் பலமடங்கு குறைந்துள்ளது என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.



**அ**மெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்சி மையம் சனி கிரகத்திலிருந்து பூமியை புகைப்படம் எடுப்பதற்காக கஸ்சினி என்ற விண்கலத்தை அனுப்பி வைத்தது. வட அமெரிக்காவின் பகல் பொழுதில் சனி கிரகத்திலிருந்து கஸ்சினி என்ற விண்கலமும், ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசிய பகுதிகளின் பகல் பொழுதில் புதன்



## சனி கிரகத்திலிருந்து பூமியை படம் பிடிப்பு!

கிரகத்திலிருந்து மெஸ்செஞ்சர் விண்கலமும் அங்கிருந்தபடி பூமியை படம் எடுக்கும் என்று விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை ஏற்கனவே பூமியில் இருந்து சுமார் 1.5 பில்லியன் தொலைவிற்கு அப்பால் இருந்து பூமியை படம் எடுத்தது. இதனையடுத்து கடந்த சனிக்கிழமை மீண்டும் பூமியை படம் எடுத்தது. மேலும், அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்களிடம், விண்ணைப் பார்த்து பகல் 2:27 மணி முதல் 2:42 மணி வரை கையசைத்து காட்ட வேண்டும் என்று நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் கேட்டிருந்தது. அந்த புகைப்படங்களும் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் கஸ்சினி விண்கலத்தின் அந்தப் படங்கள் எல்லாம் பூமிக்கு வர வெகுநாள் ஆகும் என்றும் நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# Cross My Heart - சிறுவர்களின் அகவுலகம்

- சுரேஷ் கண்ணன் -

Lafracture du myocarde - பிரெஞ்ச் திரைப்படம் சிறுவர்களுக்கிடையே நிலவும் அற்புதமான தோழமையைப் பற்றி பேசுகிறது.




பெரியவர்கள், தாமே சிறுவர்களின் உலகை கடந்து வந்தவர்கள்தாம் என்றாலும் கூட கடந்து வந்த பிறகு சிறுவர்களின் உலகை புரிந்து கொள்ளவோ கணிக்கவோ தவறி விடுகிறார்கள். அவர்களுக்குள் நிரம்பியிருக்கும் அனுபவம், சிறுவர்களின் உலகிலுள்ள அறியாமையுடன் கூடிய களங்கமற்ற தன்மையை புரிந்து கொள்ள விடாமல் தடுக்கிறது. மாறாக சிறுவர்கள் பெரியவர்களை எத்தனை அற்புதமாக புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய ஆச்சரியமாகவும் இருக்கிறது.

தகப்பன் யார் என்று அறியாச் சிறுவன் மார்ட்டின். படத்தின் தொடக்கத்திலேயே அவனுடைய தாய் இறந்து விடுகிறார். தாம் அநாதை என்பது வெளிப்பட்டு விட்டால் அதற்குரிய விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு விடுவோம் என்பதால் வெளியுலகத்திற்கு தெரிவிக்காமலேயே இருக்கிறான். இதை அறிந்து கொள்ளும் அவனுடைய பள்ளி நண்பர்கள் பிணத்தை யாருக்கும் தெரியாமல் புதைத்து விட்டு மார்ட்டினுக்கு மிக ஆதரவாக இருக்கிறார்கள். அவனுடைய தாய் இறந்து போனது வெளியுலகிற்கு தெரியாமல் மிக சாமர்த்தியமாக சமாளிக்கிறார்கள். அதுவரை பள்ளியில் மந்தமாக இருந்த மார்ட்டின் அதிக மதிப்பெண் பெற உதவுகிறார்கள். ஆனால் படத்தின் இறுதியில் உண்மை வெளிப்பட்டு மார்ட்டின் ஆதரவற்றோர் பள்ளியில் சேர்க்கப்பட்டு விடுகிறான். நண்பர்கள் அவனை சந்தித்து விட்டு சோகத்துடன் திரும்புவதுடன் படம் நிறைகிறது.

Cross My Heart எனும் திரைப்படத்தைக் காணும் போது இது ஒரு திரைப்படம் எனும் உணர்வே நமக்கு வருவதில்லை. அந்த அளவிற்கு நேர்த்தியான இயக்கமும் சிறுவர்களின் பங்களிப்பும் இப்படத்தில் நிரம்பியுள்ளது. மார்ட்டினாக நடித்திருக்கும் சிறுவன் இறுதிவரை தன்னுடைய இறுக்கமான மனநிலையை கைவிடுவதில்லை. இப்படியாக ஒவ்வொரு நண்பர்களுக்கும் உள்ள தனித்தன்மை மிக கச்சிதமாக உருவாக்கப்பட்டு அதே நிலையில் நடித்திருக்கிறார்கள். அவர்களுக்குள் உள்ள நட்பு, ரகசியமான காதல், திருட்டுத்தனங்கள், அந்த வயதிற் கேயுரிய பிரத்தியேக குணங்கள் போன்றவை மிகத் திறமையாக பதிவாக்கப்பட்டிருக்கின்றன.



குழந்தைகள் நம்மை மிகவும் விரும்புகிறார்கள் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். இது ஓரளவில் உண்மை என்றாலும் மறுபுறம் நம்மை எந்த அளவிற்கு வெறுக்கிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்வதில்லை அல்லது புரிந்து கொள்ள விரும்புவதில்லை. கீழே இறங்கி அவர்களின் உலகிற்குள் உள்ளே நுழையாமல் இந்த மனத்தடையை தாண்டிவர முடியாது என்பதும் இந்தத் திரைப்படத்தில் அற்புதமாக பதிவாகியிருக்கிறது.

பொதுவாகவே பிரெஞ்சுத் திரைப் படங்கள், சிறுவர்களின் அகவுலகை மிக நுட்பமாகவும் நேர்த்தியாகவும் பதிவாக்குகின்றன. The 400 Blows, The kid with a Bike போன்ற திரைப்படங்கள் உடனடி நினைவுக்கு வருகின்றன. நம்முடைய தமிழ்த் திரைப்படங்களில் செயற்கையான புத்திசாலித்தனத்துடன் உருவாக்கப் படும், பெரியவர்களை மிமிக்ரி செய்யும் குழந்தைகளை இதில் காண முடிவதில்லை. மாறாக அவர்களின் வயதுக்கேயுரிய யதார்த்தமான மனநிலையுடன்தான் இயங்குகிறார்கள். குடும்பம், பள்ளி போன்ற நிறுவனங்கள் எத்தனை அபத்தமான சட்டதிட்டங்களை போட்டிருக்கின்றன என்பதும் சிறுவர்கள் எத்தனை புத்தி சாலித்தனத்துடன் தங்களின் வழியில் அதை அணுகுகிறார்கள் என்பதையும் இத்திரைப்படத்தில் காண முடிகிறது.

யாருமே அறியாமல் எப்படி சிறுவர்களால் ஒரு பிணத்தை புதைக்க முடியும் என்கிற "பெரியவர்களின்" கேள்விகள் எழுப்புகிற நம்பகத்தன்மையைத் தவிர இத்திரைப்படம் மிக இயல்பாகவும் யதார்த்தமாகவும் இயங்குகிறது.

இறுதிக் காட்சியில் ஆதரவற்றோர் பள்ளியில் சேர்க்கப்படும் மார்ட்டின் தன் நண்பர்களிடம் சொல்லும் ஒரு வசனம் அற்புதமானது. "நான் adult ஆகி விட்ட பிறகு சுதந்திரமாக இருப்பேன். அப்போது சந்திப்போம். ஆனால் அப்போது நாம் இதே மாதிரி இருப்போமா என்று தெரியாது". ஆம். பெரியவர்களாகி விட்ட பிறகு நட்பு உட்பட, எவ்வித பிரதிபலனையும் எதிர்பார்க்காத எந்தவொரு செயலையும் நாம் பெரும்பாலும் செய்வதில்லை.

# உடல் எடையை குறைப்பவர்க்குப் பரிசு!

"உங்களுடைய உடல் எடையை 2 கிலோ குறையுங்கள். உங்களுக்கு 2 கிராம் தங்கம் தருகிறோம்" என்று யாராவது சொன்னால் நம்புவீர்களா? நம்பித்தான் ஆக வேண்டும்.

துபாய் நகரசபை இப்படி அறிவித்திருக்கிறது.

எது எதற்கோ போட்டிகள் நடைபெறுகின்றன. இப்போது உடல் எடை குறைப்பதற்கான போட்டியை துபாய் நகரசபை ஏற்பாடு செய்திருக்கிறது.

ஜூலை 19 முதல் 30 நாட்களுக்குள் குறைந்தது 2 கிலோ எடையைக் குறைக்க வேண்டும். அதுக்கு மேலே குறைத்தால்... ஒவ்வொரு கிலோ எடைக்குறைப்புக்கும் 1 கிராம் தங்கம் தருகிறார்களாம். துபாய் நகரசபையின் தலைவர் ஹுசைன் நாஸர்லூட்டா, "உடல் எடையைக் குறைப்பதால் ஏற்படும் நன்மைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மக்களின் தவறான வாழ்க்கைப் பழக்கங்களை மாற்றவுமே இந்த ஏற்பாடு" என்கிறார்.



# உணவு சமிபாடடையும் நேரம்

நாம் உண்ணும் ஒவ்வொரு வகை உணவும் இரைப்பையில் சமிபாடடைய எவ்வளவு நேரம் ஆகிறது என்று அமெரிக்க டாக்டர் வில்லியம் போமேன்ட் என்பவர் ஆராய்ந்து கண்டுபிடித்துள்ளார்.

அவற்றில் சில:

*சோறு சமிபாடடைய - 1 மணி நேரம்.
*பால் சமிபாடடைய - 2 மணி நேரம்.
*நெய் மற்றும் அவித்த முட்டை சமிபாடடைய - 3 மணிநேரம்.
*மாமிசம் சமிபாடடைய - 4 மணிநேரம்.



# சொன்னது நீ தானா?

"கரகாட்டக்காரன்", "தாலாட்டு கேக்குதம்மா" போன்ற படங்களுக்குப் பிறகு கனகாவின் புகழ் உச்சத்தில் இருந்தது. "நெஞ்சில் ஓர் ஆலயம்", "வானம்பாடி" படங்களைப் பார்த்து தேவிகாவின் மீதிருந்த மயக்கம் சற்றே கனகாவின் பக்கம் திரும்பிக் கொண்டிருந்தது.

ராஜா அண்ணாமலைபுரத்திலுள்ள அவர்களின் வீட்டில் இருவரையும் ஒரே இடத்தில் சந்திக்கிற சந்தர்ப்பம். மிடுக்கான பழைய வீடு.

கதவைத் தட்டியதும் கனகாதான் கதவைத் திறந்தார். ஜீன்ஸ் பாண்ட்டும் டீ சேர்ட்டும் போட்டிருந்தார். புடவையில் மட்டுமே பார்த்திருந்த அவரை இப்படி எதிர்பார்க்காதது தான் அதிர்ச்சிக்குக் காரணம். போதாததற்கு மூக்குக் கண்ணாடி வேறு அணிந்திருந்தார். அவர் இப்படி இருந்திருக்கக் கூடாது என்று நினைத்தேன். ஒரு நடிகை, ரசிகனின் எதிர்பார்ப்பைப் புறந்தள்ளிவிட்ட ஏமாற்றம் அது.



உள்ளே வரவேற்பறையில் அமர வைத்தார். தேவிகா வந்தார். கனத்த சரீரம். "நீ இதுக்கு முன்னாடி வந்திருக்கே இல்லையாப்பா?" என்றார். பத்திரிகையாளர்களிடம் வழக்கமாக அறிமுகப்படுத்திக் கொள்ளும் பாணி அது. கண்களில் துறுதுறுப்பும் நாணமும் தென்படாத அவருடைய உருவத்தையும் மென்மையற்ற குரலையும் ஒரு வயதான தாய்க்கான அடையாளம் என உடனடியாக ஏற்றுக்கொள்ள மனம் தயங்கியது.

எதிரில் வந்து அமர்ந்த தேவிகா, நான் கேட்க வந்த கேள்விகளை அலட்சியம் செய்துவிட்டு அவர் ஏதோ பேச ஆரம்பித்தார். "அந்த படுபாவி, குடிகாரன், இப்ப என் பொண்ணு எங்கிட்டதான் இருக்கணும்னு சொல்றானே... நியாயமா சொல்லு? பெத்து வளர்த்து ஆளாக்கி இவ்வளவு தூரம் வந்த பிறகு எங்க இருந்து வந்தான் அவன். (கனகாவைக் காட்டி) இவ பொறந்தப்ப விட்டுட்டுப் போனவம்பா. இப்ப நடிகையாகி சம்பாதிக்கிறான்னு தெரிஞ்சதும் பாசம் பொத்துக்கிட்டு வந்துடுச்சாக்கும்... ஏம்பா அந்த ஸ்டூலை எடுத்து முன்னாடி போடு... காலை இப்படி கீழே தொங்கவிட்டு வெச்சிருந்தா வீங்கிப் போவுதப்பா. இப்படி மேலே வெச்சுக்கிறேன்... ம்... என்ன சொன்னேன்? குடிகாரன்.... குடிகாரன்... எதுக்கு சொந்தம் கொண்டாடுறான் இப்ப வந்து?"

அவர் திட்டிக்கொண்டிருப்பது கனகாவின் அப்பாவை என்பது கொஞ்ச நேரம் கழித்துத்தான் புரிந்தது. எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் திட்ட ஆரம்பித்ததில் எனக்கு நேராகவே காலை நீட்டி உட்கார்ந்ததில் சற்று நிலைகுலைந்து போனேன். என் கனவெல்லாம் சரிந்து தரைமட்டமாக விழுந்தது. மாலை ஆறரைக்கு அவர் வீட்டுக்குப் போனவன் இரவு எட்டு மணிக்கு வெளியே வந்தேன். எனக்குப் பழக்கமில்லாத பகுதி அது. இருண்ட தெருக்கள் வழியாக ஏதோ வாழ்க்கையின் தாத்பர்யம் புரிந்து போனவன் மாதிரி நடந்தேன். அங்கே இங்கே சுற்றி தேனாம்பேட்டை சிக்னல் வந்ததும்தான் எனக்கு வழி விளங்கியது.

அடுத்த ஆண்டில் தேவிகாவும் இறந்துபோக, கனகாவைப் பேட்டி எடுக்க நினைத்த போது ஒரு அட்வகேட் எண்ணைக் கொடுத்து அவரிடம் அனுமதி வாங்கவேண்டும் என்றார்கள். அந்த எண்ணில் பேசினேன். "நீங்கள் யார், எதற்காகப் பேச வேண்டும்? என்ன பேச வேண்டும்? என்று நிறைய கேள்விகள் கேட்டார்கள். அதன்பிறகு கனகாவை சினிமாவிலும் பார்க்க முடியவில்லை. பொது நிகழ்ச்சிகளிலும் பார்க்க முடியவில்லை.

அந்த வீட்டையும் பார்க்கவில்லை.

('செல்லுலாயிட் சித்திரங்கள்' நூலில் தமிழ்மகன்)

## மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு

# துண்டாடப்படும் உறவுகளால் தூரதேசம் போகும் பந்தபாசம்

உறவுகள் துண்டாடப்பட்ட உருக் குலைந்த சமூகமாக இன்றைய சமூகம் மிளிர்வதற்குக்காரணம் முரண்பாடு கள், பிரச்சினைகள் அவ்வப்போது த்க்கப்படாமையே ஆகும.

பெறறோர் - பிள்ளைகளுக் கிடையே பிரச்சினைகள், சகோத ரர்களுக்கிடையே முரண்பாடுகள், கணவன் - மனைவிக்கிடையே பிளவு கள், உற்றார் - உறவினர்களுக்கி டையே பிரிவுகள் எனத்தொடர்ந்து செல்கின்றது எம்மவரின் உறவு நிலைத் துணடாட்டம். இது பற்றிச் சிந்திக்க வேண்டிய கட்டாய தேவை இன்று எழுந்துள்ளது.

**முரண்பாடு என்றால் என்ன?**

முதலில் முரண்பாடு என்பது வேறு, பிரச்சினை என்பது வேறு என்பதை அனைவரும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இரு துரு வங்களுக்கிடையில் சரியான நியா யம இருக்கும் போது கருத்து வேறுபாடு களால் ஏற்படுவது முரண்பாடாகும். உதாரண மாக ஒரு காட்டு வழியாக ஒரு முய லும் ஒரு அணிலும் வருகின்றன. இலை மறைவில் இருந்த அப்பிள் பழத்தை முயல் காட்டுகின்றது. அணில் மரத்தில் பாய்ந்து அதனைப் பறிக்கும் போது அப்பிள்பழம் தவறி சதுபபு நிலத்துக்குள் விழ நேரிடுகின்றது.

அப்போது அவ்வழியால் பாய்ந்த முள்ளுப்பன்றியின் முள்ளில் பதிந்து அப்பிளபழம் பாதுகாக்கப்படு கின்றது.

அப்பிள்பழத்தை நடுவில் வைத்து விட்டு இது யாருக்குச் சொந்தம் எனும் கருத்து முரண் பாடு ஏற்படுகின்றது. முயல் "இலை மறைவில் இருந்ததை நான் காட்டாவிட் டால் எவருக்கும அது கிடைத்திருக் காது" ஆகவே இது எனக்குத்தான் சொந்தம் என்கின்றது. அணில் "நான். இதை மரத்தில் ஏறிப் பறித்திராவிட் டால் யாருக்கும் இது கிடைத்திராது. ஆகவே இது எனக்குத்தான் சொந்தம்" என்கிறது.

முள்ளுப்பன்றி "நான் பாய்ந்து பாதுகாக்கவில்லையானால் இது எவர்க்கும் கிடைத்திராமல் சதுப்பு நிலத தில் விழுந்திருக்கும். ஆகவே இது எனக்குத்தான் சொந்தம்" என்கிறது. இதனைச் சற்றுச்சிந்தித்துப் பாருங்கள் முததுருவ நியாயங்களும் சரியானவை. ஆனால் கருத்தில் வேறுபாடு உள் ளது. இதுதான் முரண்பாடு இதனைத் தீர்ப்பது சற்றுக்கடினம்.

**பிரச்சினைகள் என்றால் என்ன?**

சரியான நியாயம் ஒரு துருவத்தில் மாத்திரம் இருக்கும் மறு துருவத்தில் பிழையான நியாயம் இருப்பது தெளி வாகத் தெரிந்தால் அது பிரச்சினை. உதாரணமாக கணவன் குடித்து, வெறித்து குடும்பப் பாரத்தைச் சுமக் கும் மனைவியை துன்புறுத்துவது பிரச்சினையாகும்.

**முரண்பாடுகள் என்றால் என்ன?**

இரு துருவத்திலும் சரியான நியாயம் இருக்கும்போது கருத்து வேறுபாடுகளால் ஏற்படுவது முரண்பாடாகும். அப்பிள் பழத்திற்கு உரிமைகோர மூவர்க்கும் உரிமையுண்டு. அப்படியானால் அது யாருக்குச் சொந்தம்.

**முரண்பாடுகளை எப்படித் தீர்ப்பது?**

மத்தியஸ்தமாக வேறொருவரை நாடுவதை விடுத்து எமது வாழ்வில் வரும் சமூகத்தொடர்பாடல் முரண் பாடுகளை நாமே தீர்ப்பதற்கு பல வழி கள் உள்ளன. நியாயங்கள் என்பது முன்வைப்பில் மாத்திரமே தங்கி உள்ளது. ஆனால், மனிதாபிமானம் என்பது முரண்பாடுகளுக்கு அப்பால் தீர்வினைக்கொண்டு வரும். நாம் வாதப பிரதிவாதங்களை முன் வைக்கும்போது "நாம் எமது" "நான் எனது" எனும் வட்டத தில் நின்று தான் பார்க்கிறோமே தவிர ஒரு கணம் சுயத்துக்கு அப்பால் எதி ராளியின் நிலையில் நின்று சிந்தித்தால் முரண்பாடு சுலபமாகத் தீரும். நாம் அவ்வாறு சிந்திப்பதில்லை. சரியான நியாயங்கள் சமசந்தர்ப்பத்தில் இருக் கும்போது மறுதுருவத்துக்குள் சென் றால் அடுத்தவரின் நியாயங்களும் சரி யெனத் தோன்றும் ஆகவே, சுயத்துக்கு அப்பால் சில நொடிகள் சுற்றி வந்தால் முரண்பாடுகள் சுலபமாகத் தீரும்.

எமது வாழ்வியலில் வரும் பிரச் சினைகள், முரண்பாடுகள் எல்லாமே ஒரு வகை ஆணவத்தினால்தான் வலுப பெறுகின்றன. இதனை சிந்தனைகளால் சீபடுத்தும்போது பெருமளவு பிரச்சினை கள் முரண்பாடுகள் தீர்க்கப்படும்.

*''எதை நீ கொண்டு வந்தாய் அதை இழப்பதற்கு எதற்காக அழுகின்றாய் ......*

அருமையான பகவத்கீதை வாக்கி யங்கள் உண்மையில் இந்தப் பூமியில் நாம் கொள்ளும் ஆணவங்கள், அகங் காரங்கள் போன்றவற்றிற்கு எந்த அர்த்தமும் இல்லை என்பதை கீதா உப தேசம்தெளிவாக எடுததுக் காட்டுகின்றது.

*"மெய்யென்று மேனியை யார் சொன்னது"* என்று தொடங்கிய கண்ண தாசன் இறுதியில் "கடமையை இன்றே செய்வதில் தானே ஆனந்தம்" என்று முடிக்கின் றார். இப்படிப்பட்ட நிலையாமை பற்றிய சிந்தனைகள் ஒவ்வொரு வருடைய மனங்களிலும் ஒரு துருவத் தில் இருக்க வேண்டும். இது பல பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் ஓர் சிந்தனையாகும். ஆகவே பிரச்சினை கள், முரண்பாடுகள் ஏற்படுவது மனித வாழ்வில் சாதாரணமானது. எனினும், அது உடனுக்குடன் தீர்க்கப் படவேண்டும் என்பது கட்டாய தேவையாகும்.

*நாலு மனிதர்களை சந்தோசப்படுத்தி நாமும் சந்தோசமாக வாழ்வது தான் இந்த வாழ்வில் வெற்றியாகும்.*

- வெண்கட்டியன்



# புதிர்ப்போட்டி 53

அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.

**புதிர்ப்போட்டி 53 இற்குரிய விடைகள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 15.08.2013**

## இலகுவான எண் புதிர்

1) ஓர் எண்ணை நினைக்கவும் : உ+ ம் 157
2) அத்துடன் அடுத்த கூடிய எண்ணைக் கூட்டவும் : 157 + 158 = 315
3) வரும் விடையுடன் 9 ஐ கூட்டவும் : 315 + 9 = 324
4) பின் இரண்டால் வகுக்கவும் : 324 /2 = 162
5) அத்துடன் எண்ணிய எண்ணைக் கழிக்கவும் : 162 - 157 = ?
6) உங்கள் விடை எப்போதுமே 5 ஆகும்.

## ஒருவரின் வயதையும் நினைத்த எண்ணையும் கண்டுபிடிக்கும் புதிர்

1) இரு எண்களுடைய எண்ணை நினைக்க வும் உ+ம் 80
2) அதனை இரண்டால் பெருக்கவும் 80x2 =160
3) ஐந்தைக் கூட்டவும் : 160 + 5 = 165
4) பின் 50 ஆல் பெருக்கவும் 165x50 = 8250
5) வரும் விடையுடன் இவ் ஆண்டில் உங்கள் பிறந்த நாள் கழிந்திருப்பின் 1763 ஐக் கூட்டவும். இவ் ஆண்டில் உங்கள் பிறந்த நாள் இன்னும் கழியாதிருப்பின் 1762 ஐக் கூட்டவும். கூட்டி வரும் விடையுடன் உங்கள் பிறந்த ஆண்டை கழித்து விடையைக் கூற வும். நீங்கள் நினைத்த எண்ணையும் உங்கள் வயதையும் கண்டு பிடிக்கவும்.

## சரியான விடை எழுதி பாராட்டுப்பெறுபவர்கள் விபரம்

பெயர் :- யோ.தனுசன்
பாடசாலை:- யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.

பெயர் :- ம.யோதீஸ்வரன்
பாடசாலை:- யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.

பெயர் :- வி.நிலேக்கா
பாடசாலை:- யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

பெயர் :- அ.றொமிலா
பாடசாலை:- யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

பெயர் :- ம.வினோலியா
பாடசாலை:- யா/ நெடுந்தீவு றோ.க.க.ம. கல்லூரி.

பெயர் :- தே.தனுசியா
பாடசாலை:- யா/ நெடுந்தீவு றோ.க.க.ம. கல்லூரி.

பெயர் :- பி.ஜீவன்
பாடசாலை:- யா/ பத்திரிசியார் கல்லூரி.

## புதிர்ப்போட்டி 52 இற்கான சரியான விடைகள்

1) ஜோஸப் நைஸ்போர் நீப்ஸே
2) பிட் (Bit)
3) ஹோமோ சேப்பியன்ஸ்
4) மிட் அட்லாண்டிக் ரிட்ஜ்
5) ஆல்பிரெட் நோபல்
6) 1901 ஆம் ஆண்டு
7) 1969 ஆம் ஆண்டு
8) பாங்க் ஆ.்.ப் சுவீடன்
9) டிசம்பர் 10
10) தராயல் சுவிடீஷ் அகாடமி ஆ.்.ப் சயின்ஸ் ஸ்டாக்ஹோம்
11) த.நோபல் அசெம்ப்ளி
12) த.சுவீடிஷ் அகாடமி ஸ்டாக்ஹோம்
13) நார்வீஜியன் நோபல் கமிட்டி
14) ஒஸ்லோ, நோர்வே
15) மேரி கியூரி

தபால் மூலமும் அனுப்பலாம், காரியாலயத்திலுள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியிலும் போடலாம். யாழ் பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் போடலாம்.


மாணவர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்! புதிர்ப்போட்டி விடைகளுடன் உங்களது போட்டோப் பிரதி ஒன்றையும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

## அனுப்பவேண்டிய முகவரி

புதிர்ப்போட்டி இல....
தினமுரசு
இல .373 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர் :- ..............................
பாடசாலையின் பெயர் ..............................
தரம் :- :- ..............................
தொலைபேசி இல.:- ..............................
முகவரி :- ..............................
..............................



# பாடசாலை சுகாதார முகாம் செயற்திட்டம்

# யாழ். மாவட்டத்தில் ஆரம்பித்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

கல்விச் சேவைகள் அமைச்சு சுகாதார அமைச்சு மற்றும் சுதேச வைத்தியத்துறை ஆகியவை இணைந்து பாடசாலை சுகாதார முகாமை கடந்த புதன்கிழமை யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் நடாத்தியுள்ளன.

யாழ். கல்வி வலயத்தின் பைலற் திட்டத்தின் மூலம் யாழ் மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இம்முகாமில் பத்து பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 250 பாடசாலை மாணவர்களும் 150 ஆசிரியர்களும் மற்றும் பெற்றோரும் இப்பாடசாலை சுகாதார முகாமில் பங்கு பற்றினார்கள். கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திசநாயக்கா பிரதம விருந்தினராகவும். வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.



வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், சுகாதார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், கல்விச் சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ரேணுகா பீரிஸ், மத்திய சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார மையத்தின ஆலோசகர் ஆயிஷா, வட மாகாண கல்விப்பணிப்பாளர் வை. செல்வராசா, வலயக் கல்விப் பணிப்பாளர்கள், யாழ் மாவட்ட சுகாதார பணிப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரிகள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

சுகாதார மேம்பாட்டு நிகழ்வுகள் காலையில் நடைபெற்றன. இதன் பின் நோய்களை இனங்காணும் நிகழ்வுகள் இடம்பெற்றன. நோய்களை இனங்காணும் செயற்பாடுகளில் பொதுப் பரிசோதனை, போசாக்கு அளவீடு, கண் பரிசோதனை, பல் பரிசோதனை மற்றும் ஆய்வுகூட சோதனைகள் என்பன இடம் பெற்றன. யாழ் போதனா வைத்தியசாலை சிறுவர் வைத்திய நிபுணர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் விசேட நிகழ்வாக யாழ் மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தினால் கண்காட்சி ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததுடன். பாடசாலை மாணவர்களின் கலாசார நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டன.

# மாலுசந்தி கால்வாய் துரிதகதியில் புனரமைப்பு



யாழ். பருத்தித்துறை 750 இலக்க வழித்திட வீதியின் புனரமைப்பு பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

இவ்வீதி புனரமைப்புடன் அல்வாய் மாலுசந்தி பகுதியிலுள்ள கால்வாய் புனரமைப்பு வேலைகளும் இடம்பெற்றுவருகிறது.

போக்குவரத்துக்கு மிகப்பிரதான வீதியாக இவ் வீதி காணப்படுவதுடன் இவ்வீதி புனரமைக்கப்படுவதால் இனிவரும் காலங்களில் இலகுவான சிரமமற்ற போக்குவரத்தை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் எனப் பலராலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை கால்வாய் புனரமைப்புப் பணிகள் ஒப்பந்த காரர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இக்கால்வாய் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின்சில நடவடிக்கைகளால் வீதியால் செல்வோர்மிகுந்தஅசௌகரியங்களை எதிர்நோக்குவதாக பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக இவர்கள் வீதியால் செல்வோரிடம் தகாத வார்த்தைகளை பிரயோகிப்பதாகவும் இதனால் பயணிகள் குறிப்பாக பெண்கள் அவ்வீதிப் பகுதியூடாக செல்வதற்கு அச்சமடைவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

புனரமைப்புப்பணிகளில் ஈடுபடும்பணியாளர்கள் இது தொடர்பாக சிந்தித்து செயற்படவேண்டும் என பயணிகள்கேட்டுக் கொள்கின்றனர். (116)

# பணப் பரிசு கிடைப்பதை நம்பி பணத்தை இழந்தார் இளைஞன்

## - நுணாவிலில் சம்பவம்

(சாவகச்சேரி)

ஐந்து இலட்சம் ரூபா பணப்பரிசு கிடைத்தருப்பதாகத் தெரிவித்து வந்த தொலைபேசி அழைப்பை நம்பி பதினாறாயிரம் ரூபா பணத்தை இழந்தார் இளைஞர் ஒருவர் இச்சம்பவம் நுணாவில் மேற்கில் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது நேற்று முன்தினம் பிரஸ்தாப இளைஞருக்கு தொலைபேசி அழைப்பு வந்துள்ளது.இதில் தாம் டயலொக் நிறுவனத்திலிருந்து பேசுவதாகவும் உங்கள்தொலைபேசி இலக்கத்திற்கு5 இலட்சம் ரூபா பணப்பரிசு கிடைத்துள்ளதாகவும் இதனைப்பெற பதிவுக் கட்டணமாக தமது தொலைபேசி இலக்கத்திற்கு 16 ஆயிரம் ரூபாவை கட்டணமாக "ஈசிகாஸ்" முறையில் நண்பகலுக்குள்செலுத்துமாறும் செலுத்த தவறின் 5 இலட்சம் பணப்பரிசு கிடைக்காமல் போகலாம் எனவும் ஆங்கிலம், தமிழ் கலந்த மொழியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பேச்சை நம்பிய இளைஞர் தகவலுக்கு ஏற்ப 3 முறைகளில் இப்ப ணத்தைச் செலுத்திவிட்டு மீண்டும் அவர்களது தொலைபேசிக்கு அழைத்தபோது தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தது. இது குறித்து டயலொக் நிறுவனத்திடம் வினவியபோது அப்படி தாம்எதுவும் வழங்கவில்லை எனவும் அவர்கள் தெரிவித்ததையடுத்து இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறையிடுவதற்காக பிரஸ்தாப இளைஞர் சென்றிருந்தார்.

அண்மைக் காலமாக இவ்வாறான அநாமதேய தொலைபேசி அழைப்புக்களின் மூலம் பணமோசடிகள் குடாநாட்டில் இடம் பெற்றுவருகின்றன.

இது விடயத்தால் நாமே மிக அவதானமாகவும் புத்திசாலித்தனமாகவும் செயற்படவேண்டும் எனச் சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். (இ)



கைதடி வாழ் புலம்பெயர் உறவுகளின் நிதியுதவியுடன் கைதடி நவசக்தி சனசமூக நிலையத்தினூடாக புனரமைக்கப்படும் கைதடி எரிதிடல் அ.த.க.பாடசாலை... (51)




# சொன்னது நடக்கிறது தேர்தலுக்கு முன்பே

தேர்தலில் தமிழரசுக்கட்சி வெற்றி பெறலாம். வடக்கு மாகாண முதலமைச்சர் பதவியை விக்னேஸ்வரன் பெற்றுக் கொள்ளலாம் ஆனால் பின்பு இவர்களால் எதை சாதிக்க முடியும் என்பதில்தான் சிக்கல்கள் உள்ளது என வாரம் ஒரு காரம் முன்பு கூறி இருந்தது. இது முரண்பாடுகளில்தான் முடியும் எனவும் முற்றுப்புள்ளி கிடைக்காது எனவும் கூறிஇருந்தோம். தேர்தலுக்குப் பின்பு இது நடக்கும் எனக்கூறியிருந்தோம். ஆனால் தேர்தலுக்கு முன்பே இது சூடு பிடிக்க ஆரம்பித்துவிட்டது.

"தேர்தல் நடத்தப்படலாம் மாகாணசபை ஆட்சி முறைகள் உருவாகலாம் ஆனால் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் துண்டாடப்பட மாட்டாது" என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் கூறியதற்கு தமிழ்த தேசியக் கூட்டமைப்பு தலைவர் சம்பந்தர் பதில் அளிக்கையில் "அதை எப்படிப்பெற வேண்டும் என்று எமக்குத் தெரியும், எம்மிடம் இலங்கை அரசு தப்பிக்கொள்ள முடியாது" என்று ஆவேசமாகக் கூறினார். ஆரம்பித்துவிட்டது அரசியல் பனிப்போர் என்பதற்கு அது சிறந்த எடுத்துக் காட்டாகும்.

தமிழரசுக் கட்சியிடம் மாகாணசபை சென்றால் முரண்பாடுகளும் போராட்டங்களும் ஆவேச முழக்கங்களும்தான் மீண்டும் தமிழருக்கு மிச்சமாகப் போகின்றது, 50 வருடங்கள் போராடி போர்ச் சாதனைகளைப் படைத்த விடுதலைப்புலிகளே இந்த அரசிடம் தப்பித்துக்கொள்ள முடியாமல் போனதை மறந்து, தற்போது தமிழரசுக் கட்சியிடம் இந்த அரசு தப்ப முடியாதாம் என கிறார் சம்பந்தர் ஐயா! வெறும் வாய்வீச்சு பித்தலாட்ட அரசியல்கள் தான் இவர்களுக்கு மிச்சமாயிற்று. யதார்த்த சிந்தனைகள் எதுவும் மிஞ்சாமல் இவர்களுக்கு அற்றுப் போய்விட்டது. இவர்கள் விடும் சவால்களுக்கு ஆதாரம் என்ன? சர்வதேசம் வரும் என்ற பேய்க்காட்டலும் பொய் என்று தெளிவாகிவிட்ட பிறகு ஏன் இந்தப் பொய்யான கொந்தளிப்புகள்? இவர்கள் எதை, எப்படிச் சாதிக்கப்போகின்றார்கள் என்று யாராவது விளக்கியிருக்கிறார் களா? மொத்தத்தில் மக்களுக்கு அம்புலிப்பாடம் கற்பிக்கின்றார்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது. இதற்கு அச்சிட்ட அம்புலிமாமாப் பிரதிகளாக சில பத்திரிகைகள் குடாநாட்டில் தொழிற்படுகின்றன – இவர்களது அரிவரி அம்புலிமாமா கதைகளை அரங்கேற்ற.

இந்த மாகாண சபைத்தேர்தல் மிக முக்கியமான தேர்தல் என்பதற்கு அப்பாலும், மக்களின் விருப்பு வெறுப்புக்கு அப்பாலும் குறித்த சிலரிடம் தான் அதிகாரங்கள் செல்ல வேண்டும் என்று நியதிப்படுத்திக் கூறலாம். ஏனெனில் இது, தமிழ்மக்கள் சாதுரியமான முறையில் தங்களது அரசியலுரிமைகளை, அதிகாரங்களைப் பெறவேண்டிய ஓர் முக்கியமான தேர்தல் ஆகும். இதில் தேர்தல் தேவைக்காகப் படங்காட்டப்படும் இனவாத முரண்பாடுகளைத் தவிர்த்து அரசோடு ஒன்றிணைந்த ரீதியில் செயற்பட்டு அதிகாரங்களை வென்றெடுக்கும் ஓர் ஆளுமை கொண்ட ஓர் அரசியல் தலைமையை, அத்தலைமையின் வழிநடத்தலில் நகரும் கட்சியைத் தெரிவு செய்ய வேண்டிய கட்டாய தேவை உள்ளது. மக்களின் விருப்பு வாக்கு பலத்துக்கு அப்பால் தமிழர்களின் வாழ்வுரிமை அதிகாரங்களை வென்றெடுக்கும் அரசியல் தலைமைத் தெரிவு தமிழர்களுக்கு தற்போது தேவை.

சீராக இதனை சிந்தித்துப் பார்த்தால் யதார்த்தம் புரியும். தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் முரட்டுத்தனமான அரசியல் பார்வைகளை மறைத்து விட்டு ஏமாற்றுக்காக இணக்கப்பாட்டு அரசியலைப் பேசினாலும், அரசு இவர்களை நம்பி என்றுமே அதிகாரங்களையோ அபிவிருத்திப் பொறுப்புகளையோ கொடுக்க முன்வராது இதுதான் உண்மை. மக்களுக்கு எதையுமே செய்ய மாட்டாத முரண்அரசியலைச் செய்துகொண்டு, இங்கு எதுவுமே நடக்காது என்பதைச் சொல்லி வாக்குக் கேட்பவர்களைத் தெரிவு செய்வது தமிழ்மக்கள் மேலும் தத்தளிக்கவே உதவும்.

அதே பழைய ஏமாற்றுப் பிரச்சாரங்களையும் பொய்மைகாண் அரசியல் நாடகங்களையும் தயவு செய்து இந்தத் தேர்தலில் எந்தக் கட்சியும் மேற்கொள்ளக் கூடாது. ஏனெனில் சிறுபான்மையினரின் அதிகாரங்களை அரசிடம் இருந்து பெற்றுக் கொள்ளும் இறுதிவாய்ப்பு இத்தேர்தல் தெரிவில் தங்கியுள்ளது.

ஆகவே முன் பின் முரணான அரசியல் சம்பவங்கள், உணர்வுகள், ஓர்மங்கள் எல்லாவற்றையும் ஒரு புறம் வைத்து விட்டு அரசுடன் இணைந்து அரசுக்கு நம்பிக்கையானவராக இருக்கும் ஒருவருக்கு ஊடாகவே அதிகாரங்களை வென்றெடுக்கும் சாதுரியமான தெரிவினை மக்கள் மேற்கொள்ள வேண்டும். இவ்விடத்தில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கூறிய கருத்தினை ஞாபகப்படுத்த வேண்டும். "தமிழரசுக்கட்சியின் பிரச்சினை வேறு தமிழர்களின் பிரச்சினை வேறு. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மீது எமக்கு நம்பிக்கை இருப்பதால் தான் அமைச்சர் பதவியையே தந்திருக்கிறேன். அவர் தமிழ்மக்களுக்காக என கேட்பவற்றுக்கு மேலதிகமாகவே தர நான் ஆசைப்படுகிறேன். தமிழரசுக்கட்சியை நம்ப நான் தயாராக இல்லை. தேவையான போது என்னிடம் ஓடிவருவார்கள், கட்சி பிரச்சாரத்துக்காக என்னையும் என் அரசையும் எதிர்ப்பார்கள், இவர்களை எப்படி நம்புவது?

– வெண்கட்டியன்

# குழந்தைகளுக்கு தாய்ப்பால் வழங்கல் முன்னணியில் திகழ்கிறது இலங்கை

## பிரதி சுகாதார அமைச்சர் தகவல்



குழந்தைகளுக்குத் தாய்ப்பால் வழங்குவதில் இலங்கை ஏனைய நாடுகளை விட முன்னணியில் உள்ளது. இதனைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொண்டு 99 வீதத்திற்கு மேம்படுத்துவதே எமது நோக்கமாக உள்ளது என்று பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸநாயக்க தெரிவித்தார்.

இலங்கையில் குழந்தைகளுக்கு தாய்ப்பால் வழங்கும் வீதம் தற்போது 90 வீதமாக உள்ளது. அதனை 99 பிளஸ் 100 வீதமாக மாற்றுவதே எமது திட்டமாகும்.

இதற்கேற்ப பல்வேறு வேலைத் திட்டங்களை நாம் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தி வருகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.தாய்ப்பாலூட்டுவதற்கான ஆதரவு தாய்மார்களுக்கு அருகில் எனும் கருப்பொருளில் தேசிய தாய்ப்பாலூட்டல் வாரம் நேற்று முன்தினம் முதல் எதிர் வரும் 7 ஆம் திகதி வரை சுகாதார அமைச்சினால் பிரகடனப் படுத்துப்பட்டுள்ளது. இதனை தெளிவு படுத்தும் ஊடகவியலாளர் செயலமர்வு நேற்றுமுன்தினம் சுகாதார காரியாலயத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தாய்பாலூட்டுவதின் முக்கியத்துவம் அதன் பயன்கள் இலங்கையில் தாய்ப் பாலூட்டலை ஊக்கப்படுத்துவதன் அவசியம் என்பன பற்றி தெளிவு படுத்தப்பட்டது.

அதாவது ஒரு தாய் தன் குழந்தைக்கு குறைந்தது 6 மாதங்கள் தாயப்பால் ஊட்டுவது அவசியம். 2 வயது வரை தாய்ப் பாலூட்டுதல் மிகவும் சிறப்பானது. இது ஏனைய விட்டமின்கள் உணவுகளை விட சிறந்தது. தாய்ப்பால் உட்கொள்ளும் குழந்தை ஆரோக்கியமானதாகவும் தெளிவானதாகவும் இருக்கும்.கல்வி, விளையாட்டு என்ற அனைத்து நடவடிக்கை களிலும் தாய்ப்பால் அருந்தாத குழந்தையைவிட தாயப்பால் அருந்திய குழந்தைகள் முன்னேற்றகரமானதாக இருக்கும். ஒவ்வொரு தாயும் தாய்பாலின் முக்கியத்துவத்தை உணர்ந்து முறையான வகையில் அதனை தமது பிள்ளைகளுக்கு வழங்குவதன் மூலம் ஆரோக்கியமான குழந்தையையும் சமுதாயத்தினையும் உருவாக்க முடியும். இதுவே சுகாதார அமைச்சினதும் மகிந்த சிந்தனையினதும் குறிக்கோளாக இருக்கின்றது.

தமது சௌகரியங்கள் கருதி சில தாய்மார் தாய்ப்பாலூட்டுவதை தவிர்த்து புட்டிப்பால் ஊட்டுகின்றனர். இது தவறான ஒரு நடவடிக்கையாகும். தாய்பாலில் இருக்கின்ற சத்து வேறு எந்தப் பால்மாவிலும் இல்லை என்பதனை தாய்மார் உணர வேண்டும். மேலும் பாலூட்டல் தொடர்பான தெளிவை பெறுவதற்கு தாய்மார் முன்வரவேண்டும்.

இன்று இலங்கை முழுவதும் 45,000 குடும்ப நல சுகாதார உத்தியோகஸ்தர்கள் தாய்ப்பால் வழங்கல் தொடர்பிலான தெளிவை வழங்கும் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

முழு இலங்கையில் 90 வீதமாக தாய்ப்பாலூட்டலில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது மட்டும் அல்லாமல் தோட்டப்புறங்களில் 87 வீதமாக முன்னேற்றம் காணப்படுகின்றது. இந்நிலை தொடர்ந்து முன்னேற்றம் அடைவதற்கு அனைவரும் முயற்சிக்க வேண்டும்.

தாய்ப்பாலூட்டலில் ஏதாவது பிரச்சினைகள் தோன்றினால் அருகிலுள்ள குடும்பநல வைத்தியரை நாடுவது அவசியமானதாகும். அது மட்டுமல்லாது குழந்தை இயற்கை முறையிலோ சத்திரசிகிச்சை முறையிலோ பிறந்தாலும் குடும்பத்தவர்கள் உறவினர்கள் தாய்மாருக்கு ஆதரவாகவும் பாலூட்டுவதற்கு உதவியான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும்.

பிறந்த குழந்தைகளுக்கு சேவையை வழங்கும் வைத்தியசாலையில் பிறந்த குழந்தைகளை கவனிக்கும் ஒவ்வொரு அலுவலர்களும் பாலூட்டுவது தொடர்பான அறிவுரைகளை வழங்கும் 40 மணித்தியால பாடநெறியில் பயிற்சி பெற்றதனை உறுதிப்படுத்துவதுடன் 2010 ஆம் ஆண்டிற்குரிய போசனை தொடர்பான கொள்கை மற்றும் தாய், சேய் சுகாதாரம் தொடர்பான 2013ஆம் ஆண்டிற்கான கொள்கைகளில் குறிப்பிட்டப்படி தேசிய பாலூட்டும் கொள்கையினை அமுல் படுத்துவதற்கான சகல திறமைகளையும் கொண்டுள்ளார்கள் என்பதனை உறுதிப்படுத்த வேண்டும்.

தாய்மார்களுக்கு குழந்தை பிறந்து ஒரு மணித்தியாலத்திற்குள் தாய்ப்பாலூட்டுவதனை ஆரம்பிப்பதற்கு ஆதரவளிக்க வேண்டும். குழந்தைகள் பிறந்தவுடன் தாய்ப்பாலூட்டும் வரை தாயுடன் தோல் தொடர்பை வைத்திருக்க வேண்டும். அவற்றில் குறைந்த நிறையுடைய மற்றும் சத்திர சிகிச்சை முறை மூலம் பிறந்த குழந்தைகளை அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

தாயும் சேயும் நன்றாக இருப்பதற்கான சந்தர்ப்பங்களை அதிகளவு வழங்கவேண்டும். 24 மணி நேரமும் ஒன்றாக இணைந்திருத்தல் தாய்ப்பால் ஊட்டலை விரிவுபடுத்த வேண்டும். மேற்கூறிய இவ்விடயங்களில் குழந்தை பிறந்த வைத்தியசாலைகள் கவனம் எடுக்க வேண்டும். அத்தோடு தாய்ப்பாலூட்டுவதற்கான நம்பிக்கை இல்லாத தாய்மார்களை குழந்தை பிறந்த பின்னர் வீட்டுக்கு அனுப்பக்கூடாது. தாய்ப்பால் தொடர்பான தெளிவை வழங்கிய பின்னரே அவர்கள் வீட்டுக்கு செல்வதற்காக அனுமதிக்க வேண்டும்.

மேலும் தாய்ப்பாலூட்டல் வாரத்தின் நோக்கமாக குழந்தை பிறந்ததிலிருந்து சமூகத்திலும் வைத்தியசாலையிலும் தாய்பால் ஊட்டலுக்கு ஆதரவு அளித்தல் வேண்டும். தாய்ப்பாலூட்டல் தொடர்பான அறிவுரைகளை சுகாதார கவனிப்பு வேலையாட்கள் மூலம் வழங்குதல் பாலூட்டல் தொடர்பான முகாமைத்துவ மையத்தினை வைத்தியசாலைகளிலும் உருவாக்கல் குடும்பங்கள் உறவினர்கள் தாய்ப்பாலூட்டுவதற்கான ஆதரவை வழங்குதல் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளதாக இச் செயலமர்வில் கூறப்பட்டது.

# தொலைபேசி அழைப்பின் மூலம் கப்பம் முறைப்பாட்டை விசாரிக்க தனிப்பிரிவு

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தொலைபேசி அழைப்புகளின் ஊடாக அச்சுறுத்தி கப்பம் பெறும் செயற்பாடுகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்க தனியான பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் கீழ் குறித்த பிரிவு செயற்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் புத்திக சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

கப்பம் கோருவோர் தாம் பொலிஸார் எனத்தெரிவித்து அச்சுறுத்துவதாகவும் வர்த்தகர்கள் உட்படப் பொதுமக்களிடமும் இவ்வாறு கப்பம் கோரியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதுவரை கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவோர் சிறைச்சாலைக்குள் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் எனத் தெரியவந்துள்ளது.

17 குற்றச் செயல்களுக்காக சிறைத்தண்டனை அனுபவிப்பவர்களே கப்பம் பெறும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்

. இதேவேளை கைதிகள் இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை சிறைச்சாலைகளில் இருக்கும் கைதிகள் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துவதை தவிர்க்கும் விதத்தில் புதிய தொழில்நுட்ப உபகரணங்கள் பொருத்தப்படவுள்ளதாக அமைச்சர் சந்திரசிறி கஜதீர மேலும் தெரிவித்துள்ளார்.



வேலணை பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற நடமாடும் சேவையில் வயோதிப தம்பதியினருக்கான திருமணப்பதிவு மேற்கொள்ளப்பட்டு அதன் சான்றிதழை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா சதீஷன் அவர்களிடம் கையளிப்பதனைக் காணலாம்.(05)

# தடை நீக்கம்

மணல் விநியோகத்திற்காக இரவு நேரங்களில் விதிக்கப்பட்டிருந்த தடை நேற்று முன்தினம் முதல் நீக்கப்பட்டுள்ளது.

இதனை புவசி சரிதவியல் மற்றும் சுரங்க பணியக தலைவர் செனரத் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.இதற்கமைய, இரவு 7 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை மணல் விநியோகத்தினை மேற்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வழங்கப்படும் மணல் விநியோகத்திற்கான அனுமதிப் பத்திரத்தில் பாதுகாப்பான கடதாசி அடங்கிய ஸ்டிக்கர் ஒன்றை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், போலி மணல் விநியோக நடவடிக்கையை இனங்காணமுடியும் என புவி சரிதவியல் மற்றும் சுரங்க பணியக தலைவர் செனரத் ஜயசுந்தர குறிப்பிட்டுள்ளார்.

# ஆய்வுக்கு அனுப்பப்பட்ட நாய்க்கு விசரென் உறுதி

சண்டிலிப்பாய் பகுதியிலிருந்து கொழும்புக்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்ட நாயானது விசர் நாயென மருத்துவ அறிக்கையின் மூலம் தெரியவந்துள்ளது.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்தியதிகாரி பிரிவிற்கு உட்பட்ட பண்டத்தரிப்பு பகுதியில் கடந்த 10 நாட்களுக்கு முன்பாக பலரை கடித்ததாகக் கூறப்படும் நாயொன்று உயிரிழந்த நிலையில் அதனது தலை வெட்டப்பட்டு மருத்துவ ஆய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் குறிப்பிட்ட நாய் விசர் நாயென உறுதிப்படுத்தி அறிக்கை அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட நாய்க் கடிக்கு உள்ளாகியவர்கள் தொடர்ந்தும் கண்காணிப்பில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பப்புவா நியுகினியாவிற்கு அனுப்பப்பட்ட புகலிடதாரிகள்

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவின் புகலிடக் கோரிக்கை தொடர்பான புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர், முதற் தடவையாக பப்புவா நியுகினியாவுக்கு சட்ட விரோத குடியேற்ற வாசிகள் சிலர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 40 பேர் இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிபிசி செய்தி வெளியிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான், ஈரான் போன்ற நாடுகளைச்சேர்ந்த சட்டவிரோத குடியேற்றவாசிகளே பப்புவா நியுகினியாவுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

அவுஸ்ரேலிய அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய சட்டத்தின் பிரகாரம், படகுகள் மூலம் சட்டவிரோதமாக நாட்டுக்குள் பிரவேசிப்பவர்கள், பப்புவா நியுகினியாவுக்கே அனுப்பி வைக்கப்படுவர்.

அவர்களின் புகலிடக் கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டாலும், பப்புவா நியுகினியாவிலே அவர்கள் தொடர்ந்தும் தங்க வைக்கப்படுவார்கள்.

சட்டவிரோதமாக படகுகளில் வருகை தருபவர்களை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதாக அவுஸ்ரேலிய அரசாங்கம் குறிப்பிடுகின்றது.

எனினும். அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் புதிய திட்டம் குறித்து ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் கடும் விமர்சனம் வெளியிட்டிருந்தது.

அண்மைக்காலமாக சட்ட விரோதமாக அவுஸ்ரேலியாவுக்குச் செல்லும் படகுகள் அனர்த்தத்துக்கு உள்ளாகி பல உயிரிழப்புக்களும் சம்பவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலிருந்தும் சட்ட விரோதமாக அவுஸ்ரேலியாவுக்குச் செல்ல முற்படுகின்ற பலர் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமை மேலும் குறிப்பிடத்தக்கது.

29) சதுரவடிவக் காணி ஒன்றைச் சுற்றி 40 தூண்கள் நடப்பட்டன. இரண்டு தூண்களுக்கிடையிலான இடைவெளி 2 m எனின் சதுரவடிவக் காணியின் சுற்றளவு யாது?

1) 80 m    2) 72 m    3) 78 m

30) 

இப்பறவை உள்ள காசுத்தாளின் பெறுமதி யாது?

1) 50.00    2) 100.00    3) 500.00

**வெற்றுக்கூட்டினுள் வரவேண்டிய விடையைத் தெரிக.**

31) 3514 → 4625 → 5736 → ☐

1) 7356    2) 6573    3) 6847

32) 352 → 442 → 811 → 631 → ☐

1) 642    2) 451    3) 358

33) 19 ஆம் நூற்றாண்டின் முதலாம் தசாப்தத்தைக் குறிக்கும் ஆண்டைத் தெரிவு செய்க.

1) 1808    2) 1903    3) 1925



34) வரகு என்பதை  எனவும் களைப்பு என்பதை  எனவும் எழுதலாம் எனின் குவளை என்பதைக் குறிக்கும் குறியீட்டைத் தெரிவு செய்க.



35) வியாதி என்பதை BKD எனவும் கனவு என்பதை MPS எனவும் குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதினால் தியானம் என்பதைக் குறிக்கும் குறியீடு எது?

1) DKPB    2) DKPT    3) DPKR

36) 1/4 பங்கு நிழற்றப்பட்ட உருவைத் தெரிவு செய்க.

1)     2)     3) 

37) தேவியின் சேர்விலக்கம் 6 இலக்கங்களைக் கொண்டது. முதலாம் மூன்றாம் இலக்கங்கள் ஒற்றை எண்கள் இரண்டாம் இலக்கம் ஆறாம் இலக்கத்தின் நான்கு மடங்காகும். 4 ஆம், 5 ஆம் இலக்கங்களின் கூட்டுத்தொகை ஒன்பது ஆகும். தேவியின் சேர்விலக்கம் யாது?

1) 725638    2) 583452    3) 135279



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013 1:30 மணி

# கல்வி முரசு



ஆசிரியர் : சண் சுதர்சன்

முதலாம் இரண்டாம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டு உருக்களுடன் மிக நெருங்கிய தொடர்பினை உடைய சொற்கள் அடங்கிய விடையின் கீழ்க் கோடிடுக.

01) 

1) தகவல் - பணம் - கட்புலம்
2) மின்னஞ்சல் - சேமிப்பு - தொலைதூரம்
3) உரையாடல் - தொடர்பாடல் - மின்சாரம்

02) 

1) மகரந்தச்சேர்க்கை - தேன் - பூச்சி
2) சிறகு - விவசாயம் - சுறுசுறுப்பு
3) ஆறுகால் - முட்டை - மாமிசம்


03) சதுரம் தொடர்பான சரியான கூற்று எது?

1) நான்கு சமபக்கங்களைக் கொண்ட திண்ம வடிவம்
2) மூன்று சமபக்கங்களைக் கொண்ட மூடிய வடிவம்
3) நான்கு சமபக்கங்களைக் கொண்ட தள வடிவம்

04) பின்வருவனவற்றில் பிழையான கூற்று எது?

1) இரசம் திரவ நிலையில் உள்ள உலோகம்.
2) எல்லா மாதங்களிலும் ஐந்து வாரங்கள் உண்டு.
3) பாதையைக் கடக்கும்போது முதலில் வலது பக்கத்தைப் பார்க்க வேண்டும்.

05) இரு பக்கப்பகுதிகளும் சமனாக இருக்கும் விடையைத் தெரிக?



**கண்காட்சி ஒன்று மூன்று கட்டங்களில் காண்பிக்கப்பட்டது.**

| |
|---|
| முதலாம் கட்டம் - 3 நாட்கள் |
| இரண்டாம் கட்டம் - முதல்கட்டத்தில் இரண்டு மடங்கு |
| மூன்றாம் கட்டம் - இரண்டாம் கட்டத்தின் 1/2 பங்காகும். |

6) மூன்றாம் கட்டம் எத்தனை நாட்கள் காண்பிக்கப்பட்டுள்ளது?

1) 6 நாட்கள்
2) 3 நாட்கள்
3) 4 நாட்கள்

07) கண்காட்சி 12 ஆம் திகதி ஆரம்பமானது எனின் மூன்றாம் கட்டம் முடிவடைந்த நாள் எது?

1) 23 ஆம் திகதி    2) 24 ஆம் திகதி    3) 15 ஆம் திகதி

08) நோயாளி ஒருவருக்கு '6 மணித்தியாலங்களுக்கு ஒரு முறை இரு மாத்திரைகள் எடுங்கள்' எனக்கூறி வைத்தியர் 32 மாத்திரைகளை வழங்கினார். அம்மாத்திரைகள் எத்தனை நாட்களுக்கு போதுமானது?
1) 8 நாட்கள் 2) 4 நாட்கள் 3) 6 நாட்கள்


09) கண்ணனிடம் இருந்த பேனாக்களில் இரண்டைத் தவிர ஏனையவை சிவப்பு நிறம், இரண்டைத் தவிர ஏனையவை கறுப்பு நிறம், இரண்டைத் தவிர ஏனையவை நீலநிறம் எனின் கண்ணனிடம் இருந்த பேனாக்கள் எத்தனை?
1) 3 2) 6 3) 9

**குறித்த ஒரு வருடத்தின் நாட்காட்டியில் இருந்து பின்வரும் தகவல்கள் பெறப்பட்டன.**

| | | |
|---|---|---|
| மார்ச் - 1 செவ்வாய் | ஏப்ரல் - 1 வெள்ளி | மே 1 - ஞாயிறு |
| மார்ச் - 31 வியாழன் | ஏப்ரல் - 30 சனி | மே - 31 ................ |



10) இதற்கேற்ப அவ்வருடம் மே 31 ஆம் திகதி என்ன கிழமை?
1) புதன் 2) செவ்வாய் 3) சனி



11) இதற்கேற்ப ஜூன் 30 ஆம் திகதி என்ன கிழமை?
1) வியாழன் 2) புதன் 3) வெள்ளி


12)  இவ்வுருவின் பெறுமானம் யாது?
1) 7 2) 12 3) 9

**13 ஆம், 14 ஆம் வினாக்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.**

13) நான்கு =  எனின் ஆறு =


1)  2)  3) 

14)  எனின்  =

1)  2)  3) 


**15) கடிகாரம் ஒன்றின் முள் எப்போதும் சுழல்வது?**
**1) வலஞ்சுழியாக 2) இடஞ்சுழியாக 3) மேலிருந்து கீழாக**

**16) அந்த முதியவர் கண் மூடிவிட்டார். கண் மூடுதல் என்பது?**
**1) நித்திரை செய்தல் 2) அறிவு உண்டாகுதல் 3) இறத்தல்**

17)  இவ்வுரு சம அளவான ஈர்க்குத்துண்டுகளால் அமைக்கப்பட்டது எனின் பயன்படுத்தப்பட்ட ஈர்க்குத் துண்டுகள் எத்தனை?
1) 21 2) 11 3) 15



18)  முதலில் தரப்பட்ட உருவை அமைக்கத் தேவையான பகுதியைத் தெரிக

1)  2)  3)  4) 

19) 

1)  2)  3)  4) 

**சில பொருட்களின் விலைகள் கீழே தரப்பட்டுள்ளன.**

| | |
|---|---|
| 2Kg அரிசி | = 500g தேயிலை |
| 1Kg தேயிலை | = 400g பால்மா |
| 1kg அரிசி | =500g பருப்பு |

20) இதில் விலை கூடிய பொருள் எது?
1) தேயிலை 2) அரிசி 3) பருப்பு

21) 2 kg அரிசியின் விலை ரூபா 160 எனின் 800g பால்மாவின் விலை யாது?
1) 320.00 2) 240.00 3) 640.00

22) 1 Kg பருப்பின் விலை எவ்வளவு?
1) 320.00 2) 160.00 3) 640.00

**தரப்பட்ட சொற்களை ஒழுங்குபடுத்தி பழமொழி அமைக்குக.**

23) சட்டியானாலும் / கொளுக்கட்டை / சரி / வெந்தாற் / ஓட்டை

------------------------------------------------------------

24) ஆடியே / அம்பலத்தில் / வேண்டும் / அறையில் / ஆட

------------------------------------------------------------

**25 ஆம் 26 ஆம் வினாக்களுக்கு காரணமாக அமையக்கூடிய விடையைத் தெரிக.**


25) நேற்று விமானசேவை முழுமையாக தடைப்பட்டது.
1) விமானத்தில் இயந்திரக் கோளாறு
2) நேற்று விடுமுறை தினமாகும்.
3) சீரற்ற காலநிலை நிலவியமை.

26) நாவலர் வித்தியாலய மாணவர்கள் சென்ற ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றனர்.
1) மாணவர்கள் அதிக முயற்சியுடன் கல்வி கற்றமை.
2) பாடசாலை அடைந்துள்ள பிரபல்யம்.
3) பரீட்சை இலகுவாக இருந்தமை.

27) நீர்த்தாங்கி ஒன்றில் 1/8 பங்கு நீர் நிறைய 10 நிமிடங்கள் எடுக்கும் எனின், தாங்கி முழுமையாக நிறைய எடுக்கும் காலம் யாது?
1) 1 மணி 2) 1 மணி 20 நிமிடம் 3) 45 நிமிடம்

28) 2008 ஆம் ஆண்டு 29 ஆவது ஒலிம்பிக்போட்டி நடைபெற்றது எனின் 2016 ஆம் ஆண்டு எத்தனையாவது ஒலிம்பிக்போட்டி நடைபெறும்?
1) 37 ஆவது 2) 21 ஆவது 3) 31 ஆவது

# இரவு,பகல் பாராத மின்தடை மன்னார் மக்கள் பெரும் அவதி



மன்னார் மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக இரவு, பகல் பாராது நாளாந்தம் மின் தடங்கல் ஏற்படுவதினால் மன்னார் மாவட்ட மக்களும் மாணவர்களும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக திடீர் திடீரென என மின்சாரம் தடைப்பட்டு வருகின்றது. இதனால் மின் பாவனையாளர்களது விலையுயர்ந்த 'மின்' உபகரணங்கள் பழுதடைந்துள்ளதாகவும் மின் பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது முஸ்லிம்கள் புனித நோன்பினை அனுஷ்டித்து வருகின்ற நிலையில் அதிகாலை நேரங்களில் மின் தடங்கல் ஏற்படுகின்றமையினால் புனித நோன்புக் கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதில் பல்வேறு பிரச் சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இதேவேளை 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த உயர் தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ள தாகவும் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது இரவு நேரத்தில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளமையினால் மக்கள் அச்ச நிலையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளதோடு நாலாந்தம பல மணி நேரம் மின் தடங்கல் ஏற்படுகின்ற போதும் மாதம் முடிவில் அதிகரித்த மின் பட்டியல் வருவதாகவும் மின் பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இலங்கை மின்சாரசபையின் பிரதம மின் பொறியியலாளர் எஸ்.பிரபாகரன் தெரிவிக்கையில்

மன்னார் தொடக்கம் புத்தளம் வரையிலான அதியுயர மின் கோபுரங்ளில் உள்ள மின் கம்பிகளில் காபன் மற்றும் உப்பு படிவதினால் அடிக்கடி மின் தடங்கல் ஏற்படுகின்றது. இந்தப் பிரச்சினை ஒவ்வொரு வருடமும் இந்தக் காலப்பகுதியில் இடம் பெறுகின்றது.

எனவே இயற்கைக்கு எதிராக எம்மால் ஒன்றும் செய்ய முடியாது" எனத் தெரிவித்தார்.

## ஐந்து மாணவர்கள் கொலைவழக்கு பொலிஸாரின் விளக்கமறியலை நீடித்தது திருமலை நீதிமன்றம்



திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டில் ஐந்து மாணவர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பொலிஸ் விசேட அதிரடிப்படையின் 12 அதிகாரிகளின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அவர்களை, எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் ஏ.எல்.அஸ்ஹர் உத்தரவிட்டுள்ளார். சந்தேக நபர்கள் திருகோணமலை நீதவான் நீதி மன்றில் விசேட பிரேரணை மூலம் ஆஜரபடுத்தப்பட்டபோதே நீதவான் ஏ.எல்.அஸ்ஹர் மேற்கண்ட வாறு உத்தரவிட்டுள்ளார்.

குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கடந்த 4ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களை கடந்த 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் முன்னதாக உத்தரவிட்டிருந்தார்.

உதவி பொலிஸ் அதிகாரி உட்பட 11 பொலிஸ் விசேட அதிரடிப்படையினருமே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களாவர்.

பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்துக் காத்திருந்த 4 மாணவர்களும் மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றிருந்த மாணவர் ஒருவருமே 2006 ஆம் ஆண்டு மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கல்



ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவின் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் வன்னி பாதுகாப்பு படையினரின் தலைமைச் செயலகத்தினால் 500 மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி வவுனியா காமினி மஹகா வித்தியாலத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வானது வடமாகாண ஆளுநர் ஜீஏ சந்திரசிறி மற்றும் வன்னி பாதுகாப்புப் படைத் தளபதி ஆகியோரின் வழி காட்டுதலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டதுடன் வவுனியா மாவட்டத்திலுள்ள குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களிலிருந்து சுமார் 500 தமிழ், சிங்கள ,முஸ்லிம் மாணவர்களுக்கு ஐந்து மில்லியன் ரூபா பெருமதியான பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், வணக்கத்துக்குரிய சத்தர்ம கீர்த்தி சிரி சுமன சித்தார்த்த கல்யான திஸ்ஸபிதான நாயக்க தேரர், வன்னி படைத் தளபதி, சிரேஷ்ட அதிகாரிகள், வடமாகாண கல்வி அமைச்சு செயலாளர் சத்யசீலன், வவுனியா பொலிஸ் அத்தியட்சகர், கல்விச்சேவை அதிகாரிகள், வவுனியா இலங்கை வங்கி முகாமையாளர் பீ.நந்தகுமார, மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## போலி நாணயத்தாள்களை இனங்காண செயலமர்வு



கடந்த சில வாரங்களாக வட மாகாணத்தில் போலி நாணயத்தாள் புழக்கம் அதிகரித்துள்ளதுடன் வங்கி ஊழியர்களே போலி நாணயத்தாள்களை இனங்காண்பதில் சிரமப்படுகின்றனர்

அதேவேளை, வடக்கில் போலி நாணயத்தாள் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் வங்கி ஊழியர்கள் சிலர் கைது செய்யப்பட்டிருப்பதுடன் போலி நாணயத்தாள் அச்சிட்ட ஒருவர் யாழ்.மாவட்டத்தில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதனையடுத்து பணம் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய சகல உத்தியோகத்தர்களும் போலி நாணயத்தாளை இனங்காண்பது தொடர்பான செயலமர்வு இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்தியக் கிளையினால் இன்று காலை 9 மணிக்கு யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்தச் செயலமர்வில் போலி நாணயத்தாளை இனங்காண்பது மற்றும் தூய நாணயத்தாள் கொள்கை நடைமுறைப்படுத்தல் தொடர்பாகவும் விளக்கவுரைகள் இடம்பெறவுள்ளன

## நவீனமயமாகும் நாடாளுமன்றம்

இலங்கை நாடாளுமன்றம் அமைந்துள்ள கட்டடத்தை முழுமையாக நவீனமயப்படுத்தவும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு புதிய வீடமைப்புத் தொகுதி ஒன்றை நிர்மாணிக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரதமர் டி.எம். ஜயரத்ன அமைச்சரவையில் தாக்கல் செய்த இது தொடர்பான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதனடிப்படையில் நாடாளுமன்றத்தை நவீனமயப்படுத்தும் புனரமைப்பு நடவடிக்கைகள் துரிதமாக ஆரம்பிக்கப்பட உள்ளன.

இதற்கான ஒப்பந்தம் வரையறுக்கப்பட்ட சுமிடோமோ மிட்சுய் என்ற ஜப்பானிய நிறுவனத்திற்கு வழங்கப்பட உள்ளது.

## ஆடி அமாவாசையை முன்னிட்டு கீரிமலைக்கு விசேட பஸ்சேவை



ஆடி அமாவாசை தினத்தன்று கீரிமலைக்கு செல்லவுள்ள மக்களின் நன்மை கருதி எதிர்வரும் 6 ஆம் திகதி விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட மினிபஸ் சங்கங்களின் தலைவர் எஸ்.கெங்காதரன் தெரிவித்தார்.

உலகளாவிய இந்துக்களால் எதிர்வரும் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆடி அமாவாசை தினம் அனுஷ்டிக்கபபடவுள்ளது.

இத்தினத்தில் உயிரிழந்தவர்களுக்கான பிதிர்க்கடன் செலுத்தப்படுகிறது.

இந்நிலையில், இலங்கையில் உயிரிழந்தவர்களுக்கான பிதிர்க்கடன் செலுத்தும் சிறந்த இடமாக கீரிமலை விளங்குவதால் இத்தினத்தில் பெருந்திரளானோர் கீரிமலைக்குச் செல்வது வழமை.

இதனால், மக்களின் போக்குவரத்து வசதி கருதி மினி பஸ்கள் பல சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை வீதி, சுன்னாகம், அளவெட்டி வழியாகவும் மற்றும் அம்பனை வழியாகவும் இந்தச் சேவைகள் இடம்பெறவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை போக்குவரத்துச் சபையினரின் பஸ் சேவையும் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## நிதி சேகரிப்பு

வடவரணி முன்பள்ளிக்கு இதுவரை கட்டடம் இல்லாததால் வடவரணி அ.த.க. பாடசாலைக் கட்டடத்தில் சிறுவர்களுக்கு கற்றல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதைத் தவிர்க்கும் முகமாக அருகில் உள்ள காணி ஒன்றைக் கொள்வனவு செய்யப்பட உள்ள நிலையில் பண வசதி இல்லாததால் பொதுமக்களிடம் இயன்றளவு பணச் சேகரிப்பு நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.

பெரும்பாலான மக்கள் இக்காணிக் கொள்வனவுக்கு நிதி அன்பளிப்பு செய்து வருகின்ற அதேவேளை காணி கொள்வனவு செய்த பின்பு தொண்டு நிறுவனம் ஒன்று கட்டிட வசதி ஏற்படுத்தி தருவதாக உறுதி அளித்ததாக முன்பள்ளி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வாழ்க வளமுடன்


பெயர் :சி.தீபிகா
முகவரி : கலட்டி வளவு, தம்பாலை அச்சுவேலி
அகவை 7 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

பெயர் :ஞா.கஷ்மிகா
முகவரி : உடுப்பிட்டி
அகவை 9 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# அயல்நாடுகளுடனான உறவை வளர்த்தெடுப்பதே முதற்பணி

## இந்திய புதிய வெளியுறவுச் செயலர் தெரிவிப்பு



இந்திய வெளியுறவுத்துறை செயலாளராக நேற்றுமுன்தினம் பொறுப்பேற்றுக்கொண்ட சுஜாதா சிங், அண்டை நாடுகளுடனான நட்புறவை வளர்ப்பதே தனது முதல் பணி எனவும், பாகிஸ்தானுடன் நல்லுறவையே இந்தியா விரும்புகிறது எனவும் தெரிவித்தார். புதுடில்லியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

பாகிஸ்தானுடன் ஆக்கபூர்வமான நல்லுறவை வளர்ப்பதே இந்தியாவின் கொள்கையாக இருந்து வருகிறது.

அதற்கு வன்முறை, பயங்கரவாதம் ஆகியவை இல்லாத சூழல் அமையவேண்டியது கட்டாயமாகிறது.

2011இல் பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கியது. இரண்டு கட்டப் பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன.

தற்போது பாகிஸ்தானில் புதிய அரசு அமைந்திருக்கிறது. அந்த அரசுடன் விட்ட இடத்திலிருந்து பேச்சுவார்த்தையைத் தொடருவோம். அண்டை நாடுகளுடன் நல்லுறவை வளர்ப்பதற்கே முக்கியத்துவம் கொடுத்து செயற்படவிருக்கிறேன். உலக நாடுகளுடன் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த உறவை வலுப்படுத்துவதே அடுத்த பிரதான நோக்கமாகும்.

இந்திய பாதுகாப்புப்படை வீரர்கள் ஜெனிவா தீர்மான வரம்பை மீறி மோசமாக நடத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. 1999இல் பாகிஸ்தான் வீரர்களால் கொல்லப்பட்ட கப்டன் சௌரவ் காலியா விவகாரத்தில் உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும்போது, அவற்றை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்போம். இந்த விவகாரத்தை பாகிஸ்தானிடம் எழுப்புவோம். பூடானுடன் நிலவி வரும் சுமுகமான உறவைத் தொடர்ந்து தக்கவைக்க அந்நாட்டின் புதிய அரசுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம். அந்நாட்டுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வந்த மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு ஆகியவை நிறுத்தப்பட்டதால் தொழில்நுட்ப ரீதியிலான பின்னடைவு ஏற்பட்டுள்ளது. வெளியுறவுத்துறை செயலாளராக நான் செல்லும் முதல் நாடு பூடான்தான் என்று சுஜாதா சிங் கூறினார்.

உலகச் செய்திகள்

# ஸ்நோடனுக்கு புகலிடம் வழங்கியது ரஷ்யா



அமெரிக்காவிலிருந்து தலைமறைவான அந்நாட்டின் உளவுத்துறையின் செயல்திட்டத்தை அம்பலப்படுத்தியதாக கூறப்படும் எட்வர்ட் ஸ்நோடனுக்கு ரஷ்யாவில் தஞ்சம் கிடைத்துள்ளது.

அவரது தஞ்சக் கோரிக்கைக்கான ரஷ்ய அரசின் ஆவணங்களைப் பெற்றபிறகு, இதுவரை மாஸ்கோ விமான நிலையத்தில் தங்கியிருந்த ஸ்நோடன் அங்கிருந்து வெளியேறினார்.

ஊடகங்களின் பார்வையில் படாமல், ஸ்நோடன் விமான நிலையத்தின் பின்புற வாயில் வழியாக வெளியேறிச் சென்றதாக பி.பி.சி. செய்தியாளர் தெரிவித்தார். அவர் எவ்வளவு நாட்கள் ரஷ்யாவில் இருப்பார் என்பது குறித்தோ, எங்கு சென்றார் என்பது குறித்தோ தகவல்களில்லை. ஆனால் அவர் பாதுகாப்பான இடத்திற்குச் செல்கிறார் என்று அவரது வழக்கறிஞர் கூறினார்.

முன்னாள் உளவுத்துறை கணனி நிபுணர் எட்வர்ட் ஸ்நோடனின் பயண ஆவணங்களை அமெரிக்கா இரத்துச் செய்ததால் இவர் கடந்த ஆறு வாரங்களாக மாஸ்கோ விமான நிலையத்திலேயே தங்கியிருந்தார். அமெரிக்க உளவுத்துறையின் இரகசிய கண்காணிப்பு செயல்திட்டத்தை அம்பலப்படுத்தியமைக்காக அவர்மீது அமெரிக்க அரசு வழக்கு தொடர்ந்துள்ளது. அவர் அமெரிக்காவிற்கு கொண்டுவரப்பட்டு வழக்கு விசாரணையில் ஆஜர்படுத்தப்பட வேண்டும் என்று அந்நாடு விரும்புகிறது.

# எகிப்தில் ஜனநாயகம் ஏற்படுவதை இராணுவமே பொறுப்பேற்கவேண்டும்

## அமெரிக்கா தெரிவிப்பு

எகிப்தில் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்கான பொறுப்பை அந்நாட்டு இராணுவம் ஏற்க வேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. மக்களின் போராட்டங்களால் ஜனாதிபதி மொஹமட் முர்ஷி பதவி விலக்கப்பட்டதன் பின்னர் அங்கு பாரிய மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

அவரை பதவியிலிருந்து விலக்குவது பல மில்லியன் மக்களின் கோரிக்கையாக காணப்பட்டதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெர்ரி தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் முர்ஷி பதவி விலக்கப்பட்டமை ஒரு அரசியல் சதித் திட்டமென அமெரிக்கா கருத்து வெளியிட்டிருந்தது.

இதனால் எகிப்திற்கான வருடாந்த நிதியுதவியும் குறைக்கப்படுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளரின் தற்போதைய கருத்தானது எகிப்தின் இடைக்கால அரசாங்கத்திற்கு அமெரிக்கா ஆதரவு வழங்குவதை வெளிக்காட்டுவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானிற்கு விஜயம் செய்துள்ள ஜோன் கெர்ரி அங்கு இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.



இதேவேளை எகிப்தில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களினால் நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளமை கவலையளிப்பதாக ஜோன் கெர்ரி குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அமெரிக்கா விசேட கவனம் செலுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


# தமிழகக் கடலில் சீனர்களா? உடன் தகவல்தர அறிவுறுத்து

தமிழகக் கடல் பகுதியில், சீனர்கள் தென்பட்டால், உடனே தகவல் தெரிவிக்க வேண்டும் என, மீனவர்களை, இந்திய கடலோர காவல்படை வலியுறுத்தி உள்ளது. சீன தரைப்படை வீரர்கள், இந்தியாவின் வடக்கு எல்லையில் தமிழக கடல் பகுதியில், சீனர்கள், சில தினங்களுக்கு முன் ஊடுருவினர். அதற்கு முன், இலங்கை கடற்படை ரோந்து கப்பலில், சீன வீரர்கள் இருந்ததாக, ராமேஸ் வரம் மீனவர்கள் புகார் கூறியிருந்தனர். இந்திய கடலோரக காவல் படைவீரர்கள், இராமேஸ்வரம், மண்டபம், பாம்பன் பகுதி மீனவர்களிடம், சீனர்கள் குறித்து, தற்போது எச்சரித்துள்ளனர்.

அவர்கள், தமிழக மீனவர்களிடம், நம் கடல் எல்லைக்குள், அந்தியர்கள், குறிப்பாக சீனர்கள் தென்பட்டால், உடனே கடலோர காவல்படை நிலையத்துக்கு, 04573-241238, 242020 என்ற தொலைபேசி எண்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

கடலோர காவல் படை அதிகாரி கூறுகையில், முன்பை விட, ரோந்து பணியை, இராமேஸ்வரம் அருகேயுள்ள ஐந்தாம் திட்டு முதல், கோடியக்கரை வரை, தீவிரப்படுத்தி உள்ளோம். அந்தியர்கள் ஊடுருவலை தடுக்க, மீனவர்களும் ஈடுபாடு காட்ட வேண்டும் என்பதால், புதியவர்களின் நடமாட்டம் குறித்து தகவல் தர, வுலியுறுத்தி வருகிறோம். தகவல் தருவோரின் விவரம், இரகசியமாக வைக்கப்படும் என்றார்.

# இத்தாலி முன்னாள் பிரதமரின் நிதிமோசடி குற்றச்சாட்டு நிரூபணம்



இத்தாலி முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி மீதான நிதி மோசடி குற்றச்சாட்டு அந்நாட்டு உச்சநீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனால் வழக்கின் தீர்ப்பு விரைவில் வழங்கப்படவுள்ளது.

அவருக்கு நீண்டகால சிறைத்தண்டனையே வழங்கப்படவுள்ளதர்க இத்தாலி தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் தனக்கு வழங்கப்படவுள்ள கடுமையான சிறைத்தண்டனை தொடர்பில் முன்னாள் பிரதமர் பெர்லுஸ்கோனி அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை எனவும் இது தொடர்பில் முன்னெடுக்கப்படும் வழக்கு விசாரணைகளை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறைத்தண்டனை வழங்கப்படலாமென்ற தகவல் கிடைக்கப் பெற்றதும் முன்னாள் பிரதமரின் உரையாடல் அடங்கிய காணொளியொன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தன் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் வழக்கை தள்ளுபடி செய்யுமாறு இறுதியாக பெர்லுஸ்கோனி முன்வைத்த மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 76 வயதான முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி தான் மிகவும் வயதானவர் என்பதால் சிறைத்தண்டனையை அனுபவிக்க விரும்பவில்லையென கருத்து வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இத்தாலி பிரதமராக பெர்லுஸ்கோனி இருந்த காலப்பகுதியில் பெண்கள், தொடர்பான விடயத்தில் கடும் சர்ச்சைகளுக்கு ஆளானவர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

# சிரியஆயுதக் கிடங்கின் மீது புரட்சிப்படையினர் தாக்குதல்

## 40 பேர் பலி பலர் படுகாயம்

சிரியாவில் ஆயுதக் கிடங்கு மீது புரட்சிப்படையினர் நடத்திய ரொக்கெட் தாக்குதலில் 40 பேர் பலியானதுடன் பலர் காயமடைந்துள்ளனர். அரசின் கட்டுப் பாட்டில் உள்ள ஹாம்ஸ் பகுதியில் உள்ள ஆயுதக் கிடங்கின் மீதே புரட்சிப் படையினர் திடீர் தாக்குதலை நடத்தினர்.



இந்தத் தாக்குதலில் 40 பேர் பலியாகினர்.

நூற்றுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்து ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிகிச்சை பெற்று வருபவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இதேபோல் அக்ருமா மற்றும் அல்-நோழா மாவட்டங்களிலும் புரட்சிப்படையினர் நடத்திய ரொக்கெட் தாக்குதல்களில் பல கட்டடங்கள் இடிந்து தரை மட்டமாகின. நூற்றுக்கணக்கான மக்கள் படுகாயமடைந்தனர்.

# சுயேட்சையாக போட்டியிடுவது ஏன்?

## முதன்மை வேட்பாளர் பாலசுப்பிரமணியம் விளக்கம்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் வடக்கு மாகாண சபை தேர்தலில் போட்டியிட இடமளிக்கப்படாத தரப்புக்கள் சுயேட்சையூாக தற்போது களமிறங்கியுள்ளன. அருளம்பலம் பாலசுப்பிரமணியம் என்பவரை முதன்மை வேட்பாளராகக் கொண்டு போட்டியிடும் இச்சுயேட்சைக்குழு காக்கைவன்னிய துரோகத்தினால் சுதந்திரக் கூட்டமைப்பின் பெயர்ப்பட்டியலிருந்து தாம் தூக்கப்பட்டதாக தெரிவித்தது. எனினும் தாம் பூட்டு சின்னத்தில் சுயேட்சையாகப் போட்டியிட்டு மகிந்தவின் கரங்களை பலப்படுத்தப்போதாக யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

வேட்பாளர் தெரிவு தொடர்பாக பலாலியில் நடைபெற்ற முதலாவது கூட்டம் முதல் அலரி மாளிகையில் நடைபெற்ற நேர்முகம் வரை நாம் பங்கு பற்றியிருந்தோம். வேட்பாளர்கள் தொடர்பான பட்டியலிலும் முதலில் எமது பெயர்கள் இருந்தன. ஆனால் உள்வீட்டுத் துரோகத்தினால் நாம் ஏமாற்றப்பட்டு வெளியே விடப்பட்டோமெனவும் தெரிவித்தார்.

யுத்தத்தினாலும் இடப்பெயர்வினாலும் பாதிக்கப்பட்ட மக்களிற்கு நாம் உதவி வருகின்றோம். எனினும் அவை தேர்தல் நோக்கமாக கொண்டதல்ல. இந்நிலையில் எமது தேவைகளை குறிப்பாக இளம் சமூகத்தை நோக்கமாக கொண்டு முன்னெடுக்க முடிவு செய்திருப்பதாகவும் தெரிவித்த முதன்மை வேட்பாளர் அருளம்பலம் பாலசுப்பிரமணியம் தேர்தல் பணிகளில் தலையிடாதவாறு படைத்தரப்பின் உதவிகளை அவ்விவகாரங்களிற்கு பெறப்போவதாகவும் தெரிவித்தார்.

## எம்.பி.யின் வாகனம் விபத்தில் சிக்கியது

முன்னாள் எம்.பியும் தற்போதைய ஜனாதிபதி இணைப்பாளருமான கனகரத்தினத்தின் வாகனம் விபத்திற்கு உள்ளாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தா பாடசாலையின் முன்பாகவே இந்த விபத்து நடைபெற்றுள்ளது. முள்ளியவளை வித்தியானந்தா பாடசாலையின் முன்பாக மாடு ஒன்றுடன் மோதியதில் முற்றாக சேதமடைந்தது.

### அச்செழுவில்...

அமைச்சர் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார். அத்துடன் அரியாலைப் பகுதியில் படையினர் வசம் இருந்த காணிகளும் கட்டடங்களும் நேற்று பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டன.

### காணிகள்...

கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அரியாலை மத்தியில் படையினர் வசமிருந்த பொதுமக்கள் வீடுகள் மற்றும் காணிகளைக் கையளிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இச்சந்தர்ப்பத்தில் இந்த நிகழ்வு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது என்பதுடன், இதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவிற்கும் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜா ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவிற்கும் மக்களின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

யுத்தம் காரணமாக மக்களது காணிகளையும் வீடுகளையும் படைத்தரப்பினர் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் பாவிக்கவேண்டிய நிலை இருந்து வந்த போதிலும் படையினர் வசமிருக்கும் ஏனைய பகுதிகளையும் மீளவும் மக்களுக்கு பெற்றுத்தருவோம் என்று நாம் நீண்டகாலமாக தெரிவித்திருந்த நிலையில் அவற்றை மக்களுக்கு பெற்றுத்தந்துள்ளோம். இந்நடவடிக்கை தொடரும் என்றும்,

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் படைத்தரப்பினரிடம் வசமுள்ள காணிகளை பகுதி பகுதியாக மக்களிடம் கையளித்து வருகின்றோம். அது மட்டுமல்லாது படைத்தரப்பினர் வசமுள்ள ஏனைய பகுதிகளையும் இவ்வாறு படிப்படியாக விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் யுத்தத்திற்குப் பின்னரான காலப் பகுதியில் படைத்தரப்பினரால் மக்களிடம் கையளிக்கப்பட்ட பகுதிகளையும், கையளிக்கப்படவுள்ள பகுதிகளின் வரைபடத்தையும் இதன்போது அமைச்சர் அங்கே காண்பித்தார்.

இதனிடையே எதிர்ப்பு அரசியலால் எமது மக்கள் விலைமதிக்கமுடியாத உயிர், உடமை இழப்புக்களுடன் சொல்லொணாத் துன்பங்களையும். துயரங்களையும், அனுபவித்துக் கொண்டதுடன் எதிர்ப்பு அரசியல் முள்ளிவாய்க்கால் வரை கொண்டு போய்விட்டது என்றும், ஆனால் இணக்க அரசியல் ஊடாக எமது மக்களின் இழந்த போன அவர்களது வாழ்வை ஒளிமயமான, உன்னதமான எதிர்காலத்தை பெற்றுக்கொடுக்கும் வகையில் செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம் என்றும் தெரிவித்த அமைச்சர் படைத்தரப்பினர் வசமுள்ள ஏனைய பகுதிகளும் மக்கள் பயன்பாட்டிற்காக கையளிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதனிடையே நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் மக்கள் எமக்கு ஆணை வழங்கும் பட்சத்தில் மூன்று தொடக்கம் ஐந்து வருடத்திற்குள் வடமாகாணத்தை செல்வங்கொழிக்கின்ற வளங்கொழிக்கின்ற, பகுதியாக மாற்றியமைப்போம் என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆசியுடன் பலாலியில் மக்களை மீளக்குடியேற்ற முடியுமென்றும் சுட்டிக்காட்டினார்.

### வடக்கில்...

முன்னணி, 2. ஜனசெத பெரமுன, 3. இலங்கை தொழிலாளர் கட்சி, 4. எக்சத் லங்கா மகா சபா, 5. இலங்கைத் தமிழரசுக் கட்சி, 6. மக்கள் விடுதலை முன்னணி, 7. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், 8. ஜனநாயகக் கட்சி, 9. ஐக்கிய தேசியக் கட்சி, 10.ஐக்கிய சோசலிசக் கட்சி, 11. ஜனநாயகத் தேசிய கூட்டமைப்பு, 12. ஐக்கிய இலங்கை மக்கள் கட்சி.

முல்லைத்தீவு

1. இலங்கைத் தமிழரசுக் கட்சி, 2. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, 3. ஐக்கிய தேசியக் கட்சி, 4. ஐக்கிய இலங்கை மக்கள் கட்சி, 5. மக்கள் விடுதலை முன்னணி, 6. ஜனசெத பெரமுன, 7. ஜனநாயகத் தேசிய கூட்டமைப்பு, 8. இலங்கை தொழிலாளர் கட்சி, 9. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், 10. ஐக்கிய சோசலிசக் கட்சி.

மன்னார் மாவட்டம்

1. இலங்கைத் தமிழரசுக் கட்சி, 2. ஐக்கிய இலங்கை மக்கள் கட்சி, 3. ஐக்கிய தேசியக் கட்சி, 4. இலங்கை தொழிலாளர் கட்சி, 5.சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், 6. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, 7. முஸ்லிம் விடுதலை முன்னணி, 8. மக்கள் விடுதலை முன்னணி, 9. தேசிய முன்னணி, 10. ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு, 11. ஐக்கிய சோசலிசக் கட்சி, 12. ஜனநாயகக் கட்சி.

கிளிநொச்சி மாவட்டம்

1. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, 2. ஜனசெத பெரமுன, 3. இலங்கைத் தமிழரசுக்கட்சி, 4. இலங்கைத் தொழிலாளர் கட்சி, 5. மக்கள் விடுதலை முன்னணி, 6. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், 7. ஐக்கிய தேசியக் கட்சி, 8. ஐக்கிய சோசலிசக் கட்சி, 9. ஜனநாயக தேசியக் கூட்டணி, 10. ஐக்கிய இலங்கை மக்கள் கட்சி, 11. ஈழவர் ஜனநாயக முன்னணி.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் 9 சுயேட்சைக் குழுக்களும், கிளிநொச்சியில் இரண்டு சுயேட்சைக் குழுக்களும், முல்லைத்தீவில் மூன்று சுயேட்சைக் குழுக்களும், மன்னாரில் எட்டு சுயேட்சைக் குழுகளும், வவுனியாவில் ஆறு சுயேட்சைக் குழுக்களும் தேர்தலில் குதித்துள்ளன.

# குற்றச் செயல்களின் சூத்திரதாரிகளில் யாழில் 218 பேர் மடக்கிப்பிடிப்பு

கடந்தவாரம் யாழ். மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் பல்வேறு குற்றச் செயல்களின் நிமித்தமும் நீதிமன்றப் பிடியாணையின் பிரகாரமும் 218 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டிருப்பதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மொகமட் ஜெப்றி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டே அவர் இத்தரவுகளை வெளியிட்டார். இதன்படி யாழ். பொலிஸ் பிரிவில் அடித்துக் காயப்படுத்திய குற்றத்திற்காக 23 பேரும் சந்தேகத்தின் பேரில் நான்கு பேரும் பிடியாணையின் பிரகாரம் 24 பேரும் குடித்து விட்டு வாகனம் செலுத்திய 12 பேரும், சட்டவிரோத மது விற்பனை செய்த பத்துப்பேரும் களவு சம்பந்தமாக நான்கு பேரும் ஏனைய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட 37 பேரும் இவர்களில் அடங்குவதுடன் காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவில் இவ்வாறு 104 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அவர குறிப்பிட்டார்.

(பா)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரையும் சரசாலை மட்டுவில் பிரதேசங்கள், வாதரவத்தை, வீரவாணி, புத்தூர் ஆகிய இடங்களிலும், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரையும் சரசாலை மட்டுவில் பிரதேசங்கள், வாதரவத்தை, வீரவாணி, புத்தூர், இளவாலை, மாதகல், பண்டைத்தரிப்பு, வடலியடைப்பு, சித்தங்கேணி ஆகிய இடங்களிலும்,

05.08.2013 திங்கட்க்கிழமை, 06.08.2013 செவ்வாய்க்கிழமை, காலை 07.08.2013 புதன்கிழமை ஆகிய தினங்களில் 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் சரசாலை மட்டுவில் பிரதேசங்கள், வாதரவத்தை, வீரவாணி, புத்தூர் ஆகிய இடங்களிலும், 08.08.2013 வியாழக்கிழமை, 09.08.2013 வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் சரசாலை மட்டுவில் பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைபபட்டிருக்கும் என மின்சார சபை அறிவித்துள்ளது.

### சுயேட்சை...

தலைமையிலான சுயேட்சைக் குழு - 06 - சுத்தியல் சின்னத்திலும் இராசரத்தினம் ஸ்ரீதா மோதரராஜா தலைமையிலான சுயேட்சைக் குழு - 07 ஆமைப் பூட்டுச் சின்னத்திலும், கிருஷ்ணசாமி பாஸ்கரன் தலைமையிலான சுயேட்சைக்குழு - 08 - ஜம்புக்காய் சின்னத்திலும், தம்பிப்பிள்ளை இருதயராணி தலைமையிலான சுயேட்சைக் குழு - 09 - புறா சின்னத்திலும் போட்டியிடும் என யாழ். மாவட்ட உதவி தேர்தல தெரிவத்தாட்சிப் அலுவலர் தெரிவித்தார்.

(இ)

### இலங்கைக்கான...

மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

பாப்பரசர் பிரான்ஸிஸ் ஆசிய நாடுகளுக்கு அடுத்த வருடம் மார்ச் மாதமளவில் விஜயங்களை மேற்கொள்ளவிருக்கின்ற நிலையிலேயே இலங்கைக்கும் விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்வது தொடர்பில் கரிசனை செலுத்தியுள்ளதாக பாப்பரசர் பிரான்ஸிஸ் கடந்தவாரம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பாப்பரசர் பிரான்ஸிஸ் இலங்கைக்கு விஜயம் செய்வாராயின் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொள்ளும் மூன்றாவது பாப்பரசராக பிரான்ஸிஸ் கருதப்படுவார்.

நான்காவது போல் பாப்பரசர் இலங்கைக்கு 1977 ஆம் ஆண்டு முதன்முறையாக விஜயம் செய்தார். அதன் பின்னர் 1995 ஆம் ஆண்டு பாப்பரசர் இரண்டாம் ஜோன் போல் இலங்கைக்கு விஜயம் செய்தார் அவரது விஜயத்திற்கு பௌத்த பிக்குகள் தங்களுடைய கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியமையினால் குண்டு துளைக்காத வாகனத்திலேயே அவர் இலங்கையில் பயணம் செய்ய வேண்டியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### வன்முறையில்...

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் இடம்பெறுகின்ற இந்த மாகாணசபைத் தேர்தலில் எந்த விதமான வன்முறைகளும் இடம்பெறக்கூடாது என்பதே எல்லோரினதும் விருப்பமாகும்.

அந்த வகையில் தேர்தல் பிரசாரத்தின் போதும் தேர்தல் இடமபெறும் தினத்திலும் வேட்பாளர்கள் வன்முறைகளில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் வன்முறையில் ஈடுபட்டமை நிரூபிக்கப்பட்டால் அவரது மகாணசபை உறுப்புரியையும் அவர் இழக்க வேண்டியேற்படும்.

யாழ்ப்பாணத்தில் தேர்தல்கால வன்முறைகள் இதுவரை காலமும் இடம்பெறுவது மிக அரிது. இம்முறையும் அவ்வாறான எல்லோரும் வியக்கத்தக்க விதத்தில் வன்முறைகளற்ற தேர்தல் ஒன்று இடம் பெறும என நம்புகின்றேன்.

இதனைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு வேட்பாளரும் தமது தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ)

# தென்மராட்சியில் அடிப்படை பிரச்சினைகள்; கிராமிய மக்களுடன் சந்திப்பு





'வடமாகாணசபைத் தேர்தலில் ஈ.பி.டி.பியின் சார்பில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் உள்ளிட்ட வேட்பாளர்கள் தென்மராட்சி கரம்பன்குறிச்சிக்கு விஜயம் மேற்கொண்டு மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் பொது மக்களுடன் கலந்துரையாடினர்.

கரம்பன்குறிச்சி கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நேற்றையதினம் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில், வடமாகாண சபைத் தேர்தலில் ஈ.பி.டி.பியின் சார்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளராக போட்டியிடும் சின்னத்துரை தவராசா, வேட்பாளரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான கந்தசாமி கமலேந்திரன் (கமல்), வேட்பாளரும், ஈ.பி.டி.பியின் தென்மராட்சி இணைப்பாளருமான சூசை முத்து அலெக்ஸான்டர் (சாள்ஸ்) ஆகியோர் கலந்து கொண்டு மக்களது தேவைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டனர்.

இதனிடையே அப்பகுதி மக்களது ஏனைய கோரிக்கைகளான மலசலகூடம், வீட்டுத்திட்டம், வேலைவாய்ப்பு தொடர்பிலும் உரிய கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை முன்னெடுக்கப் படுமென ஈ.பி.டி.பி வேட்பாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலுக்கு அமைவாக அப்பகுதிக்கான போக்குவரத்து, மின்சாரம், வீதிப்புனரமைப்பு உள்ளிட்ட வசதிகளை பெற்றுத் தந்தமைக்காக மக்கள் தமது நன்றிகளையும் இதன்போது தெரிவித்தனர்.

## வீதி விபத்து மூவர் பலி

(கொழும்பு)

குருணாகல் பாதெனிய - அனுராதபுரம் வீதியின் தல்தாகம பிரதேசத்திற்கு அருகில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்தில் மேலும் இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தனியார் பேருந்தும், கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதியத்தில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

கம்பஹா மிரிஸ்வத்தை பிரதேசத்தை சேர்ந்த மூன்று பேரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர். இவர்கள் கம்பஹாவில் இருந்து அநுராதபுரம் நோக்கி சென்று கொண்டிருந்த போது இந்த விபத்தில் சிக்கியுள்ளனர்.

காயமடைந்தவர்கள் முதலில் மாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் குருணாகல் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.


## தென்னாபிரிக்க அணி 12 ஓட்டங்களால் வெற்றி

கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இலங்கை - தென்னா பிரிக்க அணிகளுக்கு இடையிலான முதலாவது ருவெனரி 20 போட்டியில் தென்னாபிரிக்க வீரர்கள் அபார திறமையை வெளிப்படுத்தி இலங்கை அணியை 12 ஓட்டங்களால் தோற்கடித்துள்ளனர்.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 115 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

தென்னாபிரிக்கா சார்பில் ஜேபி.டுமினி 51 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சேனாநாயக்க 3 விக்கெட்களை வீழ்த்தினார். அத்துடன் லசித் மாலிங்க ருவென்ரி 20 போட்டிகளில் நேற்று தனது 50 ஆவது விக்கெட்டினை வீழ்த்தினார்.

பதிலுக்கு 116 என்ற இலகுவான வெற்றியிலக்கை நோக்



கித் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 103 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 12 ஓட்டங்களால் தோல்வியடைந்துள்ளது.

இலங்கை அணி சார்பில் துடுப்பாட்டத்தில் எவரும் கை கொடுக்காத நிலையில் குமார் சங்கக்கார மாத்திரம் இறுதி வரை போராடி ஆட்டமிழக் காமல் 59 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் தென்னா பிரிக்கா சார்பில் அரைசதம் கடந்த டுமினி 3 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதன்படி மூன்று போட்டிகள் கொண்ட ருவென்ரி 20 தொடரில் தென்னாபிரிக்கா ஒன்றுக்கு பூச்சியம் என்ற கணக் கில் முன்னிலை வகிக்கிறது.

## சாவகச்சேரியில் அதிகாலையில் திருட்டு

சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள ஒரு வீட்டில் நேற்று அதிகாலைவேளை யன்னலினூடாக பெறுமதி மிக்க புகைப்படக் கருவி மற்றும் நகைகள் திருடர்களால் களவாடப்பட்டுள்ளன.

திறந்த யன்னலினூடாக திருடர்கள் நீண்ட தடியினைப் பயன்படுத்தி பிரயாணப்பையை எடுத்து அதற்குள் இருந்த குறித்த பெறுமதியான பொருட்களையே திருடர்கள் களவாடியுள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து வீட்டு உரிமையாளரினால் சாவகச்சேரி பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (11)

## பொதுநலவாய மாநாடு குறித்து கனேடிய தூதுவர் ஹக்கீமுடன் பேச்சு



(கொழும்பு)

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் ஷெலே விட்டிங், நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீமை நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பு அமைச்சர் ஹக்கீமின் கொள்ளுப்பிட்டி இல்லத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாட்டின் முக்கியத்துவம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பற்றியும் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டுள்ளது.

## வெலிவேரியவுக்கு ரணில் விஜயம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்ரமசிங்க வெலிவேரியவுக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடினார்.

கிணற்று நீரில் ஒரு வகையான இரசாயனம் கலந்திருப்பதாக கூறி அந்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் மேற்கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது இராணுவத்தினரால் அவர்கள் மீது தாக்குதல் நடாத்தப்பட்டது. பிரதேசவாசிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையும் தாம் கண்டிப்பதாக ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ரணிலுடன் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன் அமரதுங்க மற்றும் ருவான் விஜயவர்தன ஆகியோரும் சென்றுள்ளதுடன்



பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடியுள்ளனர்.

ஆஸஸ் தொடர்

மூன்றாவது போட்டி

இரண்டாவது நாள் ஆட்டம்

அவுஸ்ரேலியா: 527/7

இங்கிலாந்து: 28/0

## பாடசாலை அதிபர் வெறித்தனம் ஐந்து மாணவர்கள் மருத்துவமனையில்

– கிழக்கில் பரபரப்பு –

மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட வீச்சுக்கல்முனை வித்தியாலய அதிபரினால் தாக்கப்பட்ட ஐந்து மாணவர்கள் நேற்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்விடயம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

நேற்று தமிழ் பாடசாலைகள் இரண்டாம் தவணை விடுமுறையாகும். வழக்கம்போல் வீச்சுக்கல்முனை வித்தியாலயத்திற்கு மாணவர்கள் பாடசாலைக்கு சென்றுள்ளனர்.

விடுமுறை தினம் ஆகையால் மாணவர்கள் விளையாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இவர்களைக் கண்ணுற்ற வித்தியாலய அதிபர், மாணவர்களை அழைத்து அவர்களின் கால்களில் தடியினால் சராமாரியாகத் தாக்கியுள்ளார். இவர்கள் அனைவரும் இம்முறை ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் எழுதும் மாணவர்களாவர்.

மாணவர்கள் அனைவரும் தத்தமது வீடுகளுக்குச் சென்று நடந்தவற்றினை பெற்றோரிடம் கூறி தமது கால்களை காண்பித்துள்ளனர். தமது பிள்ளைகளின் கால்கள் வெடித்திருப்பதனை அவதானித்த பெற்றோர், அவர்களை மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர்.

இவ்விடயம், குறித்த பகுதியில் பலத்த பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளதுடன், சம்பவம் தொடர்பாக வைத்தியசாலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஆகஸ்ட் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.